வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu — ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 31.07.2024 புதன்கிழமை இதழ் : 213 பக்கங்கள் : 12

# பெரமுனவின் 92 எம். பிக்கள் ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவு

## நேற்று நேரில் தெரிவித்தனர்

கொழும்பு, ஜூலை 31

ஜனாதிபதித் தேர்தலில் சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் என 92 பேர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கவுள்ளனர்.

ஜனாதிபதி ரணிலுக்கான தமது ஆதரவை நேற்று நடந்த ஆளும் கட்சியின் கூட்டத்தில் தெரிவித்தனர். ஜனாதிபதி மாளிகையில் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவும் பங்கேற்றிருந்தார்.

நேற்றைய கூட்டத்தில் ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவாக செயல்படும் பிரேரணையை சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண முன்வைத்தார்.

இதனை, எஸ். பி. திஸநாயக்க எம். பி. வழிமொழிந்தார். சபையினரும் ஏகமனதாக ஏற்றுக் கொண்டனர்.

ஆளும் கட்சியின் கூட்டத்தில் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் அரசியல் சபையில் கட்சி வேட்பாளரை முன்னிறுத்த ஆதரவாக வாக்களித்த எம். பிக்கள் பங்கேற்கவில்லை எனவும் இந்தக் கூட்டத்தில் அவர்களால் பங்கேற்க முடியாது என்றும் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

ஆனால், ஆளும் கட்சி கூட்டத்தில் அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி உட்பட பலர் பங்கேற்றிருந்தார்.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதியின் வெற்றிக்காக அர்ப்பணிப்புடன் செயல்பட தயாராக இருப்பதாக சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் தொகுதி கிளைகளும் அறிவித்துள்ளன.

(ஐ)

தமிழ் அரசு கட்சி வழக்கு:

# விளக்கத்துக்கு முன்னரான கலந்தாய்வு ஒக். 14ஆம் திகதி!

திருகோணமலை, ஜூலை 31

இலங்கை தமிழ் அரசு கட்சியின் புதிய நிர்வாகிகள் தெரிவுக்கு எதிரான வழக்கில் "விளக்கத்துக்கு முன்னரான கலந்தாய்வு" எதிர்வரும் ஒக்ரோபர் 14ஆம் திகதி நடைபெறவுள்ளது.

தமிழ் அரசுக் கட்சியின் வழக்கு நேற்று செவ்வாய்க்கிழமை திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இதன் போதே, விளக்கத்துக்கு முன்னரான

11

# பிரமாண்ட பொதுக்கூட்டத்தில் வேட்பாளரை அறிவிப்போம்!

## பொதுஜன பெரமுன தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 31

சிறீ லங்கா பொதுஜன பெரமுன தனது வேட்பாளரை அறிவிப்பதற்காக பிரமாண்ட கூட்டம் ஒன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர் ஒருவரை நிறுத்தவுள்ளதாக நேற்று முன்தினம் பெரமுன கட்சி அதிகாரபூர்வமாக அறிவித்தது. இந்த நிலையில் இது குறித்து கருத்து வெளியிட்ட அந்தக்

11

# உண்மை, நல்லிணக்க ஆணைக்குழு சட்டமூலம் வர்த்தமானியிடப்படும்!

## அமைச்சரவை அங்கீகாரம்

கொழும்பு, ஜூலை 31

சட்டமா அதிபர் ஒப்புதலளித்துள்ள உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழு சட்டமூலத்தை வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சட்டவரைஞரால் வரைவாக்கம் செய்யப்பட்டுள்ள உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழு சட்டமூலம் தொடர்பாக ஆர்வம் காட்டுகின்ற தரப்பினர்களால் முன்வைக்கப்பட்டுள்ள விடயங்களை கருத்தில் கொண்டு, குறித்த சட்டமூலத்தைத் திருத்தம் செய்து புதிய சட்ட மூலத்தைத்

11

# ரூ. 20 இலட்சத்துடன் சென்றவர் குளத்திலிருந்து சடலமாக மீட்பு!

- அணிந்திருந்த நகைகள் மாயம்
- மரணத்தில் தொடர்கிறது மர்மம்

- ச.தவசீலன் -

முல்லைத்தீவு, ஜூலை 31

20 இலட்சம் ரூபாய் பணத்துடன் இரவுநேரம் தனியாக பயணித்த இளைஞர் குளத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்டார். அவர் கொண்டு சென்ற பணமும் அணிந்திருந்த நகைகளும் காணாமல் போயுள்ளன. எனவே, இது திட்டமிட்ட கொலையாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

முல்லைத்தீவு - பாண்டியன் குளத்திலிருந்தே குறித்த இளைஞரின் சடலம் நேற்று மீட்கப்பட்டது. சடலமாக

11

# பெரமுனவின் தீர்மானத்தை ராஜபக்ஷக்களே எடுத்தனர்!

## கட்சியல்ல என்கிறார் அந்தக் கட்சியின் எம். பி.

கொழும்பு, ஜூலை 31

செப்ரெம்பர் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளரை பொதுஜன பெரமுன சார்பில் வேட்பாளரை நிறுத்துவது என்பது ராஜபக்ஷக்களின் குடும்பத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம் - என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

11



# பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் இலங்கைக்கு மூன்றாமிடம்!

பாரிஸ், ஜூலை 31

பாரிஸில் நடக்கும் ஒலிம்பிக் போட்டியில் இலங்கையின் பாரம்பரிய ஆடைக்கு மூன்றாவது இடம் கிடைத்துள்ளது.

இந்தப் போட்டியில் பங்குபற்றும் அனைத்து வீரர்களும் தங்களின் நாட்டைப் பிரதிபலித்து ஆடைகள் அணிவது வழக்கம்.

இதற்கமைய, இவ்வருட ஒலிம்பிக் விழாவில்

11

# கட்சியில் பிளவு இருந்தாலும் உறவு இன்னமும் உள்ளது!

## நாமல் ராஜபக்ஷ சொல்கிறார்

கொழும்பு, ஜூலை 31

வேட்பாளரை நிறுத்துவதாக அறிவித்தபோதே பிளவையும் நாம் எதிர்பார்த்தோம். அரசியல் ரீதியாகவும் - சித்தாந்த ரீதியாகவும் பிரிந்திருந்தாலும் தனிப்பட்ட முறையில் நாம் பிரிக்கப்படவில்லை - அந்த உறவு இன்றும் உள்ளது என்று கூறியுள்ளார் பொது ஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ எம். பி.

11

# ஒரே சித்தாந்தமுடைய ஐவர் தேர்தலில் போட்டி!

## உதய கம்மன்பில சொல்கிறார்

கொழும்பு, ஜூலை 31

நல்லாட்சி அரசாங்கத்தின் ஐந்து தலைவர்கள் இந்த வருடம் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ளனர் என்று பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று அவர் நடத்திய

11

# சிறார் பாலியல் துன்புறுத்தல் 9,436 சம்பவங்கள் பதிவாகின

கொழும்பு, ஜூலை 31

சிறுவர்கள்மீதான பாலியல் துன்புறுத்தல் தொடர்பில் கடந்த ஆண்டில் 9 ஆயிரத்து 436 சம்பவங்கள் பதிவாகின என்று சிறுவர் பாதுகாப்பு அதிகாரி கீத் பிரேமரத்ன தெரிவித்துள்ளார்.

இணையவழி பாதுகாப்பு தொடர்பில் பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்வு ஒன்றில் பங்கேற்றபோதே அவர் மேற்கண்டவாறு

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

அவர் ஒரு பிரபல அரசியல் பிரமுகர். சட்டத் தரணி, அரசியல் விமர்சகர். இப்படி பல முகங்களை கொண்ட அவர், ராஜபக்ஷக்கள் ஆட்சியிலிருந்த போது அவர்களின் சாம்ராஜ்யம் இல்லாமல் போகவேண்டும் என்பதற் காக கடந்த மூன்று ஜனாதிபதித் தேர்தல்களிலும் கடுமையாக உழைத்த ஒருவர்.

நடக்கவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் தனது ஆரூ டங்கள் என்ற தலைப்பில் அவரின் முகநூலில் ஒரு பதிவை செய்திருந்தார்.

சிங்களத்தில் அவர் எழுதியிருந்ததை நண்பர் ஒருவர் வட்ஸ் அப்பில் பகிர்ந்திருந்ததால் அதனை திறந்து கூகுள் மொழிபெயர்ப்பு மூலம் மொழிபெயர்த்து படித் துப் பார்த்தேன்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாவுக்கு கிடைத்த அறுபத்தி ஒன்பது இலட்சம் வாக்குகள் எப்படியெல்லாம் போகலாம் - யார் யாருக்கு எவ்வாறு பிரிக்கப்படலாம் என்பது பற்றி தனது கூட்டல் கழித்தல்களை அவர் எழுதியிருந்தார்.

அது அவரின் கணிப்புத்தான் என்றாலும் அவர் அங்கே முக்கியமாக சொல்ல வந்தது - இந்தத் தடவை சிறுபான்மை மக்களின் வாக்குகள் (ஈழத்தமிழர், மலை யகத் தமிழர், முஸ்லிம்கள்) எவ்வாறு பகிரப்படும் என்பது பற்றியும் அதனால் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வெற்றிபெறும் வாய்ப்பு இருப்பதாகவும் ஒரு கட்டத் தில் குறிப்பிட்டிருப்பவர் - இன்னுமொரு தகவலையும் எச்சரிக்கையாக தெரிவித்திருக்கிறார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் நடப்பதற்கு சில மாதங்களுக்கு முன்னர், டான் தொலைக்காட்சி குழுமத் தலைவர் குகநாதன் தனது முகநூலில் எழுதியி ருந்த குறிப்பு ஒன்று இப்போது ஞாபகத்துக்கு வருகின்றது.

சிங்கள மக்கள் தெரிவுசெய்யப்போகும் அடுத்த ஜனாதிபதி! என்ற தலைப்பில் இரண்டாயிரத்து பத்தொன்பதாம் ஆண்டு தேர்தலுக்கு முன்னர் அவர் எழுதிய குறிப்பு இது:

"சிறுபான்மையினரின் வாக்குகள் இல்லாமல் யாரும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறமுடியாது என்று பலரும் எழுதிவருகின்றனர்.

ஒரு சின்னக்கணக்கு:

பதிவுசெய்யப்பட்ட மொத்த வாக்காளர்: 15,992,096
வாக்களிப்பவர்கள் அதிகபட்சம் 80 வீதம்: 12,793,676
வெற்றிபெறத் தேவையானவை: 6,396,839
தனி சிங்கள் வாக்காளர்கள்: 11,302,393
அவர்களில் வாக்களிப்பவர்கள் 80 வீதம்: 9,041,914
இந்த வாக்குகளில் 70.74 வீதம்: 6,396,839

ஆக, சிங்கள மக்களின் வாக்குகளில் 70.74 வீத வாக்குகளைப் பெறுகின்ற ஒருவரால் சிறுபான்மை யினர் வாக்குகள் ஒன்றுகூட இல்லாமல் ஜனாதிபதி ஆகிவிடமுடியும்.

இந்தத் தேர்தலிலும் சிறுபான்மையினர் வாக்குகள் ஜனாதிபதியை தீர்மானிப்பதை பெரும்பான்மையான சிங்கள மக்கள் விரும்பவில்லை என்று தெரிகின்றது. பொறுத்திருந்து பார்ப்போம்!"

இதுதான் அந்தக் குறிப்பு. இது 2019 தேர்தலுக்கு முந்தைய கணக்கு. சிறுபான்மையினர் வாக்குகளால் தெரிவான மைத்திரிபால சிறிசேனமீதான வெறுப்பும் கோட்டாபய வெற்றிபெறுவதற்கு காரணமா னது.

இப்போதும் நடக்கவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் மும்முனை போட்டி நடைபெறும் என்ப தால், யாரும் ஐம்பது வீதத்தை பெறமாட்டார்கள் என்றும் சிறுபான்மையினர் வாக்குகள்தான் வெற்றி யைத் தீர்மானிக்கும் எனவும் எல்லோரும் திரும்பத்திரும்பக் கூறிக்கொண்டிருக்க, சிங்கள மக்கள் கடந்த தேர்தலில் முடிவெடுத்ததைப் போல இம்முறையும் முடிவெடுத்தால் என்ன நடக்கும்?

இந்தக் கேள்வியை மேலே குறிப்பிட்ட தெற்கின் அந்த அரசியல் பிரமுகரும் குறிப்பிட்டிருக்கின் றார்.

அப்படி முடிவெடுத்தால், அவர்களின் தெரிவு ஜே. வி. பி. ஆகத்தான் இருக்கும் என்கிறார் அவர். அன்றைய கோட்டாபயவுக்கு நிகராக - ஏன் அவரைவிட சற்றுக் கடுமையாகவே இவர்கள் இனவாத முகத்தை வெளிப் படுத்தி வருகின்றனர். அதனால்தான் அண்மையில் சுவீடன் சென்றிருந்த தேசிய மக்கள் சக்தி என்ற ஜே. வி. பியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க, கோட்டாபய வின் இடத்தை தன்னால்தான் நிரப்பமுடியும் என்று பகிரங்கமாகவே கூறியிருந்தார்.

- ஊர்க்குருவி.

# மடு மாதா தேவாலய திருவிழா முன்னாயத்த கூட்டம் நடந்தது!

மன்னார், ஜூலை 31

மடு மாதா தேவாலய திருவிழா தொடர்பான முன்னாயத்த கலந்து ரையாடல் நேற்று முன்தினம் நடைபெற்றது.

மன்னார் மடு அன்னையின் ஆவணி மாத திருவிழா எதிர்வரும் 6 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 15 ஆம் திகதி நிறைவ டைகிறது.

இந்த நிலையில் தேவாலய திரு விழா தொடர்பான முன்னாயத்த கூட்டம் மன்னார் மாவட்ட அர சாங்க அதிபர் க. கனகேஸ் வரன் தலைமையில் மன்னார் மறை மாவட்ட ஆயர் இமானு வேல் பெர்னாண்டோவின் பங்கு பற்றுத லுடன் மன்னர் மாவட்ட செயல கத்தில் நடைபெற்றது.

திருவிழா காலத்தில் அதிகள வான பக்தர்கள் வருவார்கள் என்பதால் முன்னெடுக்கப்பட வேண்டிய சகல விதமான ஏற்பாடு கள் குறித்தும் அழைக்கப்பட்ட திணைக்களங்களுடன் கலந்துரை யாடப்பட்டது.

வருகை தரும் பக்தர்களின் நலனை கருத்தில் கொண்டு சுகா தாரம், போக்குவரத்து, மருத்துவ வசதிகள், குடிதண்ணீர் விநியோ கம், உணவு விநியோகம் உள்ளிட் டவை குறித்து ஆராயப்பட்டது.

மேலும் சட்டம் ஒழுங்கை பின் பற்றும் வகையில் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பாகவும் பேசப்பட்டது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் இடம்பெற்ற குறித்த முன்னாயத்த கலந்துரை யாடலில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர் னாண்டோ ஆண்டகை, குரு முதல் வர் அருட்தந்தை கிறிஸ்து நாயகம் அடிகளார், மடு திருத்தல பரிபால கர் அருட்தந்தை ஞானப்பிரகாசம் அடிகளார், இராணுவம், பொலிஸ் கடற்படை அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், மருத்துவர்கள், மற்றும் அழைக்கப்பட்ட திணைக் கள தலைவர்கள் பங்கேற்றனர். (ஐ)

## "நான் எம். பியாக விரும்புகிறேன்!"



கொழும்பு, ஜூலை 31

பாராளுமன்ற உறுப்பினராகி சிறப்புரிமையை பெற்று சில முக் கிய விடயங்களை வெளிப்படுத்த வேண்டும். இதனால், குறைந்தது இரு வருடங்களுக்காவது எம். பியாக இருக்க விரும்புகிறேன் - என்று கலகொடை அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவே முன்னிலை யில் இருக்கின்றார் என்றும் அவர் கூறினார்.

அத்துடன், ஜனாதிபதித் தேர் தல் தொடர்பில் தமது அமைப்பு விரைவில் ஊடக சந்திப்பு ஒன்றை நடத்தவுள்ளது எனவும் அவர் கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

"கோட்டாபய ராஜபக்ஷ 69 இலட்சம் வாக்குகளை பெற்ற வேளைகூட சஜித்துக்கு 55 இலட் சம் வாக்குகள் கிடைக்கப்பெற்றன. சஜித்தால் தற்போது நடத்தப்படும் நிகழ்வுகளுக்கு பெருந்திரளான மக்கள் வருகின்றனர். அவர் தன் னால் முடிந்தவற்றை வழங்குகின் றார். பேருந்து இல்லாத பாட சாலைகளுக்கு பேருந்து வழங்கப் படுகின்றது. ஆனால், அதற்கான நிதி மூலம் பற்றி சிலர் கேள்வி எழுப்புகின்றனர்.

பேருந்து இல்லாத பாடசாலை ஒன்றுக்கு அது கிடைக்கின்றதே என சந்தோசப்பட வேண்டும். குறைந்தபட்சம் இரு வருடங்கள் பாராளுமன்ற உறுப்பினராக இருக்க விரும்புகிறேன். ஏனெனில் பாரா ளுமன்ற சிறப்புரிமையை பயன் படுத்தி முக்கிய சில தகவல்களை வெளியிட வேண்டியுள்ளது." - என்றும் கூறினார். (ஐ)

# இணையம் ஊடாக வியாபார பதிவுகளை செய்யத் திட்டம்!

## வடக்கு ஆளுநர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 31

இணையத்தளம் ஊடாக வியா பார பதிவுகளை ஆரம்பிக்க துரித நடவடிக்கை எடுக்கப்படும் என வடக்கு மாகாண ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவல் மற் றும் வடக்கு மாகாண ஆளுநர் ஆகியோரின் தலைமையில் ஆளு நர் செயலக கேட்போர் கூடத்தில் நேற்று விசேட கலந்துரையாடல் நடைபெற்றது.

வடக்கு மாகாண பிரதம செய லாளர் எல். இளங்கோவன், யாழ். மாவட்ட பதில் மாவட்ட செயலா ளர் எம். பிரதீபன், ஆளுநரின் உத விச் செயலாளர், சமுர்த்தி ஆணை யாளர் நாயகம், யாழ். மாவட்டத் தில் சேவையாற்றும் பிரதேச செய லாளர்கள் உள்ளிட்ட பலர் இந்த கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

சிறுதொழில் முயற்சிகளில் ஈடு படுவோருக்கான வியாபார பதிவு களை மேற்கொள்வதில் காணப் படும் சிக்கல்கள் தொடர்பில் இதன் போது கலந்துரையாடப்பட்டது.

கால தாமதமின்றி வியாபார பதிவுகளை முன்னெடுப்பதற்கு இணையத்தள பதிவு முறையை அறிமுகப்படுத்துவது சிறந்த செயல்பாடு என்று தெரிவித்த ஆளுநர், வடக்கு மாகாணத்தில் அதற்கான செயல்பாட்டை துரித கதியில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் கூறினார்.

அத்துடன், பொதுச்சேவைக்கான செயல்பாடுகளை டிஜிற்றல் மயப் படுத்துவதும் அவசியம் என தெரிவித்தார்.

விசேட தேவையுடையோர் பொதுச் சேவைகளை இலகுவில் அணுகக்கூடிய வகையில் கட்டட நிர்மாணங்கள் அமைக்கப்படுதல் வேண்டும். அவர்களுக்கான போக் குவரத்து வசதிகள் மேற்கொள்ளப் பட வேண்டும் எனவும் இராஜாங்க அமைச்சரிடம் ஆளுநர் கோரிக்கை விடுத்தார்.

இந்த கோரிக்கையை ஏற்றுக் கொண்ட இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவல், போக்குவரத்துக் கான பேருந்துகளை பெற்றுக்கொள்ள முயற்சிப்பதாக தெரிவித்தார்,

அத்துடன் விசேட தேவை யுடையோர் இலகுவாக அணுகக் கூடிய வகையில் கட்டட நிர்மா ணங்களை மேற்கொள்ளாத பொது நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என வும் தெரிவித்தார்.

வெளிநாடுகளில் வசிக்கும் பிள்ளைகளின் பெற்றோர் அஸ்வெ சும கொடுப்பனவை பெற்றுக் கொள்வதில் காணப்படும் இடை யூறுகள் தொடர்பில் இராஜாங்க அமைச்சரின் கவனத்துக்கு இதன் போது கொண்டு செல்லப்பட் டது. அதில் காணப்படும் சிக்கல் களை நிவர்த்திக்கவும் நடவடிக்கை எடுப்பதாக இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவல் தெரிவித்தார்.

# பெருந்தொகை பணம், ஐஸ் போதையுடன் ஒருவர் கைது

கொழும்பு, ஜூலை 31

கொழும்பு, கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சேத வத்தை பகுதியில் ஐஸ் போதைப் பொருள் மற்றும் பெருந்தொகை பணத்துடன் சந்தேக நபரொருவர் பொலிஸ் விசேட அதிரடிப் படை யினரால் கைது செய்யப்பட்டுள் ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப் பட்ட சுற்றிவளைப்பில் கொழும்பு, வெல்லம்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த 60 வயதுடைய நபரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நபரிடமிருந்து 426 கிராம் 700 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் போதைப்பொருள் விற்பனை மூலம் சம்பாதித்ததாக கூறப்படும் ஒரு இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் பணம் என்பன பறிமுதல் செய்யப் பட்டுள்ளன. (எ)

# சர்வ ஜன பலய வேட்பாளராக மூவரின் பெயர் முன்மொழிவு

கொழும்பு, ஜூலை 31

"சர்வ ஜன பலய"வின் ஜனா திபதி வேட்பாளராக மூன்று பெயர்கள் முன்மொழியப்பட்டுள் ளன என்று பாராளுமன்ற உறுப் பினர் உதய கம்மன்பில தெரிவித் துள்ளார்.

ஜனாதிபதி வேட்பாளர் தெரி வின் பின்னர், ஒகஸ்ட் 4ஆம் திகதி சுகததாஸ விளையாட்டரங்கில் நடைபெறும் பிரதிநிதிகள் மாநாட் டில் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பது குறித்து நாட்டுக்கு வெளிப்படுத்தப்படும்.

"சர்வ ஜன பலய" என்பது பல அரசியல் கட்சிகளின் கலவையா கும். அதன் தலைவர்களில் ஒருவர் அல்லது வேறு யாராவது ஜனா திபதித் தேர்தலில் போட்டியிடக் கூடும் என்றும் கம்மன்பில மேலும் தெரிவித்தார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
31.07.2024 புதன்கிழமை
குரோதி வருடம், ஆடி 15

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# வித்தியாசமான தேர்தல் களம்

ஜனாதிபதித் தேர்தல் மிகவும் குறுகிய காலத்துக்குள் நடந்து முடியவுள்ளது. இதில் எவர் வெற்றி பெறுவார் என்பது தொடர்பில் தெளிவான பதில் எவரிடம் இல்லை. ஆனால், ஊகங்கள் ஏராளமுண்டு. ஆனால், ஒரு விடயம் மட்டும் வெள்ளிடைமலை. அதாவது, இந்தத் தேர்தல் களம் இலங்கைத் தீவு இதுவரையில் காணாத ஒன்றாக அமையப் போகின்றது. மும்முனை போட்டி தற்போது நான்குமுனைப் போட்டியாக மாறவுள்ளது. இந்த நிலையில், பிரதான வேட்பாளர்களில் ஒருவரும் ஐம்பது வீத வாக்குகளை தாண்டுவதற்கான வாய்ப்பில்லை என்றே தெரிகின்றது. ஒருவேளை தாண்ட வேண்டும் என்றால் நிச்சயமாக எண்ணிக்கையில் சிறுபான்மை மக்களின் வாக்குகள் கட்டாயம்.

இந்த இடத்தில், வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் வாக்குகள் பிரதான இடத்தை வகிக்கப் போகின்றது. 2005இல், தென்னிலங்கை அரசியல் நிகழ்ச்சிநிரலை குழப்பியது போன்று இம்முறையும் ஈழத் தமிழ் வாக்குகள் தென்னிலங்கையின் அரசியலை தீர்மானிக்கக்கூடியவையாக இருக்கின்றன. இதனை தமிழ் மக்கள் எவ்வாறு பயன்படுத்தப் போகின்றனர்?

ரணில் விக்கிரமசிங்க சுயேச்சையாக போட்டியிடுவதாக அறிவித்திருக்கின்றார். இந்த அறிவிப்பில் மாற்றங்களும் ஏற்படலாம் - ஏற்படாமலும் விடலாம். ஆனால், அது ஒரு சிறந்த வியூகமாகவே தெரிகின்றது. அதாவது, நான் நாட்டுக்கு தேவையென்று எண்ணுபவர்கள் அனைவரும் என்னுடன் வாருங்கள் - நாம் அனைவரும் இணைந்து நாட்டை கட்டியெழுப்புவோம் என்னும் தெரிவை அவர் ஏற்படுத்தியிருக்கின்றார். இவ்வாறானதொரு பின்புலத்தில்தான், ராஜபக்ஷ அணியினர் தனியான வேட்பாளரை களமிறக்கப் போவதாக அறிவித்திருக்கின்றனர்.

ராஜபக்ஷக்களை பொறுத்தவரையில் அவர்களின் ஒரே பிரச்னை - அவர்களின் பாதுகாப்பாகும். ஒருவேளை அநுரகுமார வெற்றிபெற்றால் அவர்களின் பாதுகாப்பு முற்றிலும் கேள்விக்கு உள்ளாகிவிடும். இந்த அடிப்படையில் நோக்கினால் அவர்களின் பிரதான இலக்கு ஜே. வி. பியின் வெற்றியை தடுத்துநிறுத்துவது. அது நிகழவேண்டுமாயின், அவர்களின் ஆதரவுத் தளத்தை முடிந்தவரையில் தங்களை நோக்கி குவிக்க வேண்டும். ஏனெனில், தற்போதைய சூழலில் அவர்களின் வாக்கு வங்கியைக் கவரக்கூடிய ஒரேயொரு கட்சி ஜே. வி. பி. மட்டும்தான்.

இவ்வாறானதொரு பின்புலத்தில் தமிழ்த் தேசிய தரப்புகள் என்ன செய்யப் போகின்றன. தமிழ்த் தேசிய அரசியலை பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறிக்கொள்ளும் கட்சிகள் இரண்டு அணிகளாக இருக்கின்றன. இவற்றை இரண்டு அணிகள் என்று உறுதியாகக்கூற முடியாவிட்டாலும்கூட, தற்போதைய நிலையில் அவ்வாறான தோற்றம் தெரிகின்றது. தமிழ் அரசு கட்சி ஓர் அணியில் நிற்கின்றது. அதாவது, தென்னிலங்கை வேட்பாளர்களின் தேர்தல் அறிக்கைகளை பார்த்துவிட்டு முடிவெடுப்பது.

தமிழ் அரசு கட்சியிலுள்ள சிலர் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை ஆதரித்தாலும்கூட தமிழ் அரசு கட்சியாக - உத்தியோகபூர்வமாக முடிவெடுக்கப்படவில்லை. அடுத்தது, தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டுக்கு ஆதரவு வழங்கும் கட்சிகள். அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் வழமைபோல் தேர்தல் பகிஷ்கரிப்புடன் இருக்கின்றது. தேர்தல் பகிஷ்கரிப்பு தமிழ் மக்கள் மத்தியில் எடுபடப் போவதில்லை. ஆனால், தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாடு வெற்றிபெறுமானால் அது தென்னிலங்கை அரசியல் நிகழ்ச்சி நிரலை நிச்சயம் குழப்பும். இந்தப் பின்புலத்தில் நோக்கினால் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாடு ஒன்றுதான், தென்னிலங்கையை பொறுத்தவரையில் ஒப்பீட்டடிப்படையில் சவாலானது.

இந்தத் தேர்தல் களத்தில் வெளிசக்திகளின் தலையீடுகள் எவ்வாறு அமையும் என்பதையும் ஊகிக்க மட்டுமே முடியும். ஆனால், இந்தத் தேர்தல் வெளிசக்திகளால் மிகவும் உன்னிப்பாக நோக்கப்படுவதற்கான அதிக சாத்தியங்கள் உண்டு. இவ்வாறானதொரு பின்புலத்தில் நடைபெறவுள்ள தேர்தல் நிச்சயமாக சிக்கலானதாகவும் - நெருக்கடிமிக்கதாகவும் - சவாலானதாகவும் இருக்கப் போவது நிச்சயமானது.

# இந்திய குச்சிப்புடி நடன பயிற்சி பட்டறை யாழில்

யாழ்ப்பாணம், ஜூலை 31

யாழ். இந்திய துணைத் தூதரகம் வடக்கு மாகாண கல்வி அமைச்சுடன் இணைந்து குச்சிப்புடி நடன பயிற்சி பட்டறையை யாழ்ப்பாணத்தில் நடத்தியது.

விம்மி பி. ஈஸ்வர் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை நடந்த இந்தப் பயிற்சி பட்டறையில் வடக்கு மாகாணம் முழுவதிலும் இருந்து 140இற்கும் மேற்பட்ட மாணவர்கள், ஆசிரியர்கள் பங்கேற்றனர்.

இந்த நிகழ்வில், விம்மி பி. ஈஸ்வர் பரதநாட்டியம் மற்றும் குச்சிப்புடி இடையே ஓர் ஒப்பீட்டு ஆய்வை நடத்தினார். அத்துடன், மாணவர்களின் பங்கேற்பை ஊக்குவித்தார். இந்த பட்டறை இந்திய பாரம்பரிய நடனத்தின் அழகை எடுத்துரைத்தது.

மறுநாளான சனிக்கிழமை துணைத் தூதரகம் தனி குச்சிப்புடி நடன நிகழ்ச்சியையும் ஏற்பாடு செய்தது. யாழ் கலாசார நிலையத்தில் விம்மி பி. ஈஸ்வர் இந்நிகழ்வில் பங்கேற்றிருந்தார்.

நிகழ்வை ஆரம்பித்து வைத்த இந்திய துணைத் தூதுவர், "இந்தியாவின் கலாசார பன்முகத்தன்மையை யாழ்ப்பாண மக்களுக்கு வெளிப்படுத்துவதற்காக இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் இருந்து கலைஞர்களை துணைத் தூதரகம் அழைத்து வருகிறது. யாழ்ப்பாணம் எப்போதுமே இலக்கியப் படைப்புகளுக்குப் புகழ் பெற்று விளங்குகிறது. இந்தியாவில் இருந்து வரும் கலைஞர்களை யாழ்ப்பாண மக்கள் ஆர்வத்துடன் வரவேற்று பாராட்டி வருகிறது. வடக்கு மாகாண மக்களின் உற்சாகம் யாழ்ப்பாண கலாசார நிலையத்தை கலாசார பரிமாற்றத்தின் துடிப்பான மையமாக மாற்றியுள்ளது", என்று தனது உரையில் குறிப்பிட்டார். (ஐ)

# சொற்பொழிவுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 31

நீர்வேலி கந்தசுவாமி தேவஸ்தான சண்முகவிலாச மண்டபத்தில் சுக்கிரவார சிறப்பு சொற்பொழிவு சிவநெறி பிரகாசர் கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெற்று வருகிறது.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவசிறீ இராஜேந்திர சுவாமிநாத குருக்களின் ஆசியுரையை தொடர்ந்து தலைமையுரையை பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாதன் ஆற்றுவார்.

இதைத் தொடர்ந்து சிறப்பு சொற்பொழிவை சைவப்புலவர் கு. சுமுகலிங்கம் "ஆடி அமாவாசை சிறப்புகள்" என்னும் தலைப்பில் ஆற்றுவார். (ஐ)

• • •

யாழ்ப்பாணம், ஜூலை 25

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவநெறி பிரகாசர் கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் சிறப்பு சொற்பொழிவு நடைபெறவுள்ளது.

16ஆவது தொடராக நடக்கும் இந்த சொற்பொழிவு நவாலி தெற்கு அருள்மிகு நாகராஜா இராஜேஸ்வரி ஆலய பிரதான மண்டபத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

மாணிக்கவாசகர் சுவாமிகளின் குரு வணக்கத்தை தொடர்ந்து சொற்பொழிவை சைவப்புலவர் க. கயிலைநாதன் "மாணிக்க வாசகரும் திருப்பொன்னூஞ்சலும்" என்னும் தலைப்பில் ஆற்றுவார். (ஐ)

# பெரமுனவின் அநுராதபுர கிளை ரணிலுக்கு ஆதரவளிக்க தீர்மானம்

கொழும்பு, ஜூலை 31

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க பொதுஜன பெரமுனவின் அநுராதபுரம் மாவட்டக் குழுவின் இணங்கியுள்ளனர் என்று அந்தக் குழுவின் தலைவரும் எம். பியுமான சந்திரசேன தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம் குருந்தன் குளத்திலுள்ள சந்திரசேனவின் பணிமனையில் நேற்று செவ்வாய்க்கிழமை இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

வட மத்திய முன்னாள் முதலமைச்சர் எஸ்.எம்.ரஞ்சித் சமரக்கோன் உட்பட மாவட்டத்தின் அனைத்து முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், அமைப்பாளர்கள், உள்ளூராட்சி மன்ற தவிசாளர்கள், உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள் என இருநூறுக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# பணத் தகராறு காரணமாக கூரிய ஆயுதத்தால் தாக்குதல்

## கராஜ் உரிமையாளர் காயம்

கொழும்பு, ஜூலை 31

கொழும்பு, கடவத்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பியன்வில பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கியதில் ஒருவர் படுகாயமடைந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை இடம்பெற்றது.

கடவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவரே இவ்வாறு காயமடைந்துள்ளார்.


காயமடைந்தவர் கராஜ் ஒன்றை நடத்தி வருவதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

பணத் தகராறு காரணமாக இந்த தாக்குதல் இடம்பெற்றதாக பொலிஸ் விசாரணையில் மேலும் தெரியவந்துள்ளது.

காயமடைந்தவர் ராகமை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து, சந்தேக நபர் பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் கூறினர். (எ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனி - 31 புதன்கிழமை
குரோதி வருடம் - ஆடி 15
நல்ல நேரம் : 09.30 - 10.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : ஏகாதசி

## இன்றைய ராசிபலன்

**மேடம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். நண்பர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புகளை சரி செய்வீர்கள். பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**இடபம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் கடந்த காலத்தில் கிடைத்த நல்ல வாய்ப்புகளையெல்லாம் சரியாக பயன்படுத்தாமல் விட்டு விட்டோமே என்றெல்லாம் வருந்துவீர்கள்.

**மிதுனம்**
கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. வியாபாரத்தில் வாடிக்கையாளர்களிடம் கனிவாகப் பழகுங்கள். விவாதம் வேண்டாம். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**கடகம்**
உங்களுடைய ஆலோசனைகள் எல்லோரும் ஏற்கும் படி இருக்கும். பொதுக்காரியங்களில் ஈடுபடுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் உதவுவார்கள். நினைத்தது நிறைவேறும் நாள்.

**சிம்மம்**
சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயல்படுவீர்கள். உறவினர், நண்பர்களுடன் மனம் விட்டு பேசுவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத்திறமை வெளிப்படும்.

**கன்னி**
உங்கள் பிடிவாதப் போக்கை கொஞ்சம் மாற்றிக் கொள்வீர்கள். வியாபாரம் சூடு பிடிக்கும். உத்தியோகத்தில் தலைமையின் ஆதரவு கிட்டும். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**துலாம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் தன்னம்பிக்கை குறையும். சிலரின் தவறான செயல்களை எண்ணி வருந்துவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் குறைக்கூறுவார்கள். பொறுமைத் தேவைப்படும்.

**விருட்சிகம்**
பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். வேலைகள் முடியும்.

**தனுசு**
எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர்கள், வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும். தொட்டது துலங்கும் நாள்.


**மகரம்**
குடும்பத்தில் உங்களின் நேரத்தை செலவழிப்பீர்கள். வியாபாரத்தில் புது சலுகைகளை அறிவிப்பீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் உங்களை மதித்துப் பேசுவார்கள். நன்மை நடக்கும்.

**கும்பம்**
தடைகளை கண்டு தளரமாட்டீர்கள். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். உழைப்பால் உயரும் நாள்.

**மீனம்**
குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். பூர்வீக சொத்து பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். விருந்தினர் வருகை அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். நினைத்ததை முடிக்கும் நாள்.

# கொலைகளுக்கு பொறுப்பேற்று தி. மு. க. பதவி விலக வேண்டும்

### எதிர்க்கட்சித் தலைவர்கள் போர்க்கொடி



சென்னை, ஜூலை 31

அரசியல் படுகொலைகளுக்கு பொறுப்பேற்று முதல்வர் மு. க. ஸ்டாலின் தலைமையிலான தமிழக அரசு உடன் பதவி விலக வேண்டும்- இவ்வாறு பா. ம. க. தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்தார்.

தமிழகத்தில் தொடர்ச்சியாக 3 கொடிய அரசியல் படுகொலைகள் இடம்பெற்றன. சட்டம் - ஒழுங்கு முழுமையாக தோல்வியடைந்து விட்டது என்பதையே இவை காட்டுகின்றன. கொலை செய்யப்பட்ட மூவருக்குமே முன்விரோதம் இருந்திருக்கிறது. இருப்பினும் அவர்களுக்குத் தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்ய பொலிஸார் தவறி விட்டனர். அதேபோல், போதை கலாசாரமும், அதனால் நிகழும் குற்றச்செயல்களும் தலைவிரித்து ஆடுகின்றன.


இனியாவது பொலிஸாரை தட்டி எழுப்பி, தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கைப் பாதுகாக்க ஆணையிட வேண்டும். இல்லையெனில், தமிழகத்தில் கடந்த 2 மாதங்களில் நடந்த அரசியல் படுகொலைகளுக்கு பொறுப்பேற்று தமிழக அரசு பதவி விலக வேண்டும்- என்றார். இதே வேளை,

முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வம், அரசு ஊழியர்களை மிரட்டுவது, பொலிஸ் துறையினரை மிரட்டுவது, பொதுமக்களை மிரட்டுவது என தி. மு. கவினரே வன்முறையில் ஈடுபடுவதும், பல சமூக விரோதச் செயல்களுக்கு தி. மு. கவினரே உடந்தையாக இருப்பதும்தான் குற்ற நிகழ்வுகள் அதிகரிப்பதற்குக் காரணம். எனவே, கொலைக் குற்றங்களில் ஈடுபடுவோர் மீது பாரபட்சமின்றி நடவடிக்கை எடுத்து, அவர்களுக்கு உரிய தண்டனையைப் பெற்றுத் தரவும், பொலிஸ் துறையினரைக் கண்டு ரவுடிகள் அஞ்சும் நிலையை ஏற்படுத்தவும் முதல்வர் நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றார்.

தே. மு. தி. க. பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த், தமிழகத்தில் நிகழும் படுகொலைகளைப் பார்க்கும்போது, சட்டம் ஒழுங்கு சீர்கெட்டு கொலை செய்வது சர்வ சாதாரணமாகிவிட்டது.

தமிழகம் கொலை நாடாக மாறாமல் இருக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றார். (எ)

## செந்தில் பாலாஜியின் நீதிமன்ற காவல் 50ஆவது முறை நீடிப்பு!



சென்னை, ஜூலை 31

முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜியின் நீதிமன்ற காவலை 50ஆவது முறையாக நீடித்து சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சட்டவிரோத பணப் பரிமாற்றத்தில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டி, அவரை அமுலாக்கத் துறை அதிகாரிகள் கடந்த 2023 ஜூன் 14ஆம் திகதி கைது செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

## ராகுல்மீது வானதி விமர்சனம்



கோவை, ஜூலை 31

மிகவும் பிற்படுத்தப்பட்ட குடும்பத்தில் இருந்து வந்த நரேந்திர மோடி மூன்றாவது முறையாக பிரதமரானதை ஐந்தாம் தலைமுறை வாரிசான ராகுல் காந்தியால் ஜீரணிக்க முடியவில்லை என்று பா. ஜ. க. தேசிய மகளிரணி தலைவி வானதி சீனிவாசன் தெரிவித்தார்.

### இலங்கை சிறையிலுள்ள

## தமிழக மீனவர்களின் குடும்பங்களுக்கு அரசின் உதவித் தொகை அதிகரிப்பு

சென்னை, ஜூலை 31

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களின் குடும்பங்களுக்கு நாளொன்றுக்கு 250 ரூபாய் வழங்கப்பட்டு வரும் தின உதவி தொகையை 350 ரூபாயாக உயர்த்தி வழங்கிட முதல்வர் மு. க. ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். மேலும், நெடுங்காலமாக மீட்க முடியாமல் உள்ள 127 படகுகளுக்கு கடந்த ஆண்டுகளில் வழங்கிய நிவாரணத் தொகையை இழுவைப்படகுகளுக்கு 5 இலட்சம் ரூபாயிலிருந்து 6 இலட்சம் ரூபாயாக உயர்த்தியும், நாட்டுப் படகுகளுக்கு வழங்கப்பட்டு வந்த 1, 50, 000 ரூபாயை 2 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கிடவும் முதல்வர் உத்தரவிட்டுள்ளார். (எ)

## தமிழகத்தில் 20 ஆண்டுகளில் 5,557 இலஞ்ச வழக்குகள் பதிவு

மதுரை, ஜூலை 31

தமிழகத்தில் 20 ஆண்டுகளில் இலஞ்ச ஒழிப்பு பொலிஸார் 5, 557 வழக்குகள் பதிவு செய்துள்ளது. இதில் 3,035 வழக்குகளில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1059 வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கைக்கும், 574 வழக்குகளில் தீர்ப்பாய ஒழுங்கு நடவடிக்கைக்கும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது என்று உயர் நீதிமன்றத்தில் அரசு தெரிவித்துள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தை பெற்ற இளம் தாய் குருதிப்பெருக்கால் இறப்பு!

## மருத்துவர்களின் அலட்சியம் காரணமா?

மன்னார், ஜூலை 31

**குழந்தை பெற்ற இளம் தாய் ஒருவர் அதீத குருதிப் பெருக்கால் உயிரிழந்தார் என்று கூறப்படுகின்றது. மருத்துவர்களின் அலட்சியமே அவரின் மரணத்துக்குக் காரணம் என்று பெண்ணின் உறவினர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.**

தனது முதல் குழந்தையை கடந்த 9ஆம் திகதி பெற்றெடுத்த இளம் தாயார் கடந்த ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்தார். இவ்வாறு உயிரிழந்தவர் மரியராஜ் சிந்துஜா (வயது -27) என்பவராவார்.

மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் அந்தப் பெண் கடந்த 9ஆம் திகதி குழந்தையை பிரசவித்தார். 11ஆம் திகதி குழந்தையும் தாயும் நலமாக வெளியேறினர். 7 நாட்களின் பின்னர் முருங்கன் மருத்துவமனையில் தையல் வெட்டுமாறு கூறியதையடுத்து கடந்த 16ஆம் திகதி முருங்கன் மருத்துவமனையில் அவருக்கு தையல் வெட்டப்பட்டதாக உயிரிழந்த பெண்ணின் தாயார் தெரிவித்தார்.

இதன் பின்னர் கடந்த சனிக்கிழமை உயிரிழந்த பெண்ணுக்கு குருதிப் பெருக்கு ஏற்பட்டது. இதையடுத்து அவர் மன்னார் பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். தொடர் குருதிப்போக்கால் ஞாயிற்றுக்கிழமை காலையில் மயக்கமடைந்தார். இதன் பின்னரே, அவர் அவசர சிகிச்சைப் பிரிவுக்கு கொண்டு செல்லப்பட்டார். எனினும், முற்பகல் 11 மணியளவில் அவர் உயிரிழந்து விட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட உடனேயே அவரை மருத்துவர்கள் பார்த்திருந்தால் தனது மகளை காப்பாற்றியிருக்கலாம் என்று பெண்ணின் தாயார் கண்ணீருடன் தெரிவித்தார்.

இது தொடர்பில், மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளரிடம் வினவிய போது,

பெண்ணின் மரணம் தொடர்பாக விசேட சட்ட மருத்துவ அதிகாரியின் பிரேத பரிசோதனை நேற்று திங்கட்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

அதிக குருதிப் பெருக்கு காரணமாக மரணம் நிகழ்ந்துள்ளதாகவும் மேலதிக பரிசோதனைகளுக்காக உடற்பாகங்கள் பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பரிசோதனை அறிக்கை வெளிவந்தால் மரணத்துக்கான காரணத்தை முழுமையாக அறிய முடியும். எப்படி இருந்தாலும் மருத்துவமனை தரப்பினர் மீது குற்றம் நிரூபிக்கப்பட்டால் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ஐ)



# யாழ். இந்து '08' உயர்தர மாணவர்களால் உதவி

யாழ்ப்பாணம், ஜூலை 31

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் 2008ஆம் ஆண்டு உயர்தர பிரிவு பழைய மாணவர்களால் திருநெல்வேலியிலுள்ள சிறுவர் இல்லத்துக்கு கடந்த சனிக்கிழமை உதவிகள் வழங்கப்பட்டன.

"மீண்டும் பள்ளிக்குச் செல்வோம்" என்னும் தொனிப்பொருளில் அந்த மாணவர்கள் கடந்த ஏப்ரல் மாதம் ஒன்றுகூடலை நடத்தியிருந்தனர். இதன்போது தமக்கு கற்பித்த ஆசிரியர்களுக்கும் மதிப்பளித்திருந்தனர்.

ஒன்றுகூடலின் ஓர் அங்கமாக சமூகநலத் திட்டம் ஒன்றையும் முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டது. இதற்கு அமைவாக திருநெல்வேலியிலுள்ள கருணாலயம் பெண்கள் சிறுவர் இல்லத்தின் கோரிக்கைக்கு அமைவாக ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான ஆடைகள் வழங்கப்பட்டன. அத்துடன் சிறுவர் இல்லத்துக்கு மதிய போசனத்துக்கு 50 ஆயிரம் ரூபாயும் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் அதிபர் இ. செந்தில்மாறன் பங்கேற்றிருந்தார். அவர், பாடசாலை மாணவிகளின் சுயகற்றலுக்கு தேவையான உதவிகள் வழங்குவதாக உறுதியளித்ததுடன், பல ஆலோசனைகளையும் வழங்கியிருந்தார். (ஐ)





படங்கள் - ஐ.சிவசாந்தன்

# நல்லூர் ஆலய கொடிச்சீலைக்கான காளாஞ்சி கையளிக்கும் நிகழ்வு!

யாழ்ப்பாணம், ஜூலை 31

வரலாற்று சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தபெருந் திருவிழாவுக்கான கொடிச்சீலை வடிவமைப்பாளர்களிடம் காளாஞ்சி கையளிக்கும் நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

வள்ளியம்மை திருக்கல்யாணப் படிப்புடன், பந்தல்கால் நாட்டுதல் நடைபெற்று, பாரம்பரிய முறைப்படி கொடிச்சீலை வழங்கும் மரபுடையவர்களுக்கான காளாஞ்சி மாட்டுவண்டில் மூலம் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திலிருந்து கல்வியங்காட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டு கலாசார முறைப்படி பெருந்திருவிழாவுக்கான பத்திரிகையும், காளாஞ்சியும் கையளிக்கப்பட்டன.

நல்லூர் கந்தன் ஆலய வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் ஒகஸ்ட் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 25 நாட்கள் திருவிழா நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

உதவிகளில் பாகுபாடு

# கிராம சேவகர் பணிமனையில் பெண் தனியாளாக போராட்டம்!

யாழ்ப்பாணம், ஜூலை 31

யாழ்பாணம் நவாலி வடக்கு ஜே/134 கிராம சேவகர் பிரிவில் கிராம சேவகர் பணிமனை முன்பாக பெண் ஒருவர் போராட்டத்தில் ஈடுபட்டார்.

கிராம சேவகர் ஊடாக வழங்கப்படும் உதவித் திட்டங்களில் பாகுபாடு காட்டப்படுவதாகத் தெரிவித்தே நேற்று முன்தினம் அவர் போராட்டத்தில் ஈடுபட்டார்.

அரசின் உதவித் திட்டங்களை கிராம சேவகரின் பெண் உதவியாளர் தனக்கு விரும்பியவர்களுக்கு வழங்குகிறார், பொதுக் கூட்டங்களுக்கு சமூகமட்ட பொதுவான இடங்களில் கூட்டத்துக்கான அழைப்பு அறிவித்தல் ஒட்டப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டுகளை குறித்த பெண் முன்வைத்தார்.



பொது அமைப்புகளுக்கு அறிவித்தல் வழக்குவதில்லை.

இது தொடர்பில், தான் உதவியாளருடன் முரண்பட்ட போது அவர், பழிவாங்கும் விதமாக செயல்பட்டார் என்றும் போராட்டத்தில் ஈடுபட்ட பெண் குற்றஞ்சாட்டினார்.

போராட்டத்தில் ஈடுபட்ட பெண் தான் அனுப்பிய கடிதங்கள், தனக்கு கிடைத்த கடிதங்களை ஆடையில் தொங்கவிட்டவாறு போராட்டத்தில் ஈடுபட்டார். (ஐ)

# முல்லைத்தீவில் தீ விபத்து; 3 கடைகள் எரிந்து நாசம்!

முல்லைத்தீவு, ஜூலை 31

முல்லைத்தீவு நகரில் பொதுச் சந்தை கட்டடத்தில் அமைந்துள்ள வணிக நிலையங்கள் இரண்டு தீ பிடித்து எரிந்து சேதமடைந்தன.

இந்த தீ விபத்து நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது. இதில், இரண்டு கடைகள் மற்றும் களஞ்சியம் ஒன்றும் தீ விபத்தின் போது சேதமடைந்துள்ளதுடன், கடையில் உள்ள பொருட்கள் அனைத்தும் தீயில் எரிந்து சாம்பராகின.

இதேவேளை தீ விபத்துக்கான காரணம் குறித்து உடனடியாகத் தெரியவரவில்லை.




இந்த தீ விபத்து சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு பிரதேச சபையின் அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

முல்லைத்தீவில் அண்மைக்காலமாக தீ விபத்து சம்பவங்கள் அதிகரித்துள்ளன. எனினும், இங்கு தீயணைப்பு பிரிவு ஒன்று இல்லாத நிலைமை காணப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரமுனவின் வேட்பாளர் அறிவிப்பு அவசியமற்றது

## ஐக்கிய தேசியக் கட்சி

கொழும்பு, ஜூலை 31

**ஜனாதிபதி வேட்பாளராக தனது சொந்த வேட்பாளரை நிறுத்துவதாக சிறீ லங்கா பொதுஜன பெரமுன எடுத்த தீர்மானம் அவசியமற்றது - இவ்வாறு ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.**



பெரமுனவின் பெரும்பான்மையான அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கின்றமையே இதற்குக் காரணம். சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் ஏற்கனவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தமது ஆதரவை வழங்குவதாக உறுதியளித்தமையால் அவருக்கு எந்தவொரு பின்னடைவும் ஏற்படவில்லை - என்றும் கூறினார்.

ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளரை நிறுத்துவது என்று பொதுஜன பெரமுனவின் அரசியல் குழு திங்கட்கிழமை முடிவெடுத்தது. அத்துடன், ரணிலுக்கான ஆதரவையும் விலக்குவதாக அறிவித்தது. இந்நிலையில், பெரமுனவின் மூத்த அமைச்சர்கள் உள்ளிட்ட 75 பாராளுமன்ற உறுப்பினர்கள் ரணிலுக்கான ஆதரவை வெளிப்படுத்தினர். இதைத் தொடர்ந்தே ஐ. தே. கவின் பொதுச் செயலர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஐ)

# நாமலுக்கு எதிராக நான் முறைப்பாடு அளிக்கவில்லை!

## அமைச்சர் பந்துல குணவர்த்தன

கொழும்பு, ஜூலை 31

நாமல் ராஜபக்ஷவுக்கு எதிராக ஹோமாகம பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார் என்று கூறப்படும் செய்தியை அமைச்சர் பந்துல குணவர்த்தன மறுத்துள்ளார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று நடைபெற்றது. இதன்போது, செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் கூறிய அவர்,

"நான் பொலிஸ் நிலையத்துக்கு சென்று எவ்வித முறைப்பாடுகளையும் அளிக்கவில்லை. எனக்கு ஏதேனும் பிரச்னைகள் காணப்பட்டாலும் அவை தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களத்திலேயே முறைப்பாடளிப்பேன்.

அண்மையில் சில குற்றச் செயல்கள் தொடர்பில்கூட நாம் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடளித்திருக்கின்றோம். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளித்துள்ளதாக செய்திகள் வெளியாவதற்கு என்னால் பொறுப்பேற்க முடியாது.

நாமல் ராஜபக்ஷவுடன் எனக்கு எவ்வித முரண்பாடும் கிடையாது. அரசியல் குழு கூட்டத்தில் பங்கேற்க சென்ற போதும், சுமுகமாக வழமை போன்று அவருடன் கலந்துரையாடினேன் - என்றார். (ஐ)

# நாடு திரும்பும் சிவாஜிலிங்கத்தை கைது செய்ய பொலிஸார் திட்டம்?

யாழ்ப்பாணம், ஜூலை 31

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கத்தை கைது செய்வதற்கு யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் பொலிஸார் தயாராக உள்ளனர் என்று கூறப்படுகின்றது.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் சுயேச்சை வேட்பாளராக போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்வதற்காக இந்தியாவில் சிகிச்சை பெற்றுவரும் அவர் விரைவில் நாடு திரும்பவுள்ளார் என்று கூறப்படுகின்றது.

இந்நிலையில், அவரை கைது செய்ய பொலிஸார் தயாராகி வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

காணி சுவீகரிப்பு தொடர்பாக முல்லைத்தீவில் நடந்த ஆர்ப்பாட்டத்தின் போது பொதுச் சொத்துகளுக்கு சேதம் விளைவித்தமை மற்றும் அரச அதிகாரிகளின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்தமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலேயே அவரை கைது செய்ய பொலிஸார் தயாராகி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதனிடையே, சிவாஜிலிங்கம் கைது செய்யப்படுவதை தடுக்க நீதிமன்றில் மனு ஒன்றை தாக்கல் செய்ய அவரின் சட்டத்தரணிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர் என்றும் கூறப்பட்டது. (ஐ)

# கடற்றொழிலாளர் பிரச்னைக்கு தீர்வை வெளிப்படுத்த வேண்டும்

## வேட்பாளர்களை கோரும் கடற்றொழில் சமூகம்

யாழ்ப்பாணம், ஜூலை 31

வடக்கு, கிழக்கு கடற்றொழிலாளர்களின் பிரச்னைகளை வெளிப்படுத்தி அதற்கான தீர்வை தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரியப்படுத்த வேண்டும் என்று வடக்கு மாகாண கடற்றொழிலாளர் அமைப்புகளின் பிரதிநிதி அ. அன்னராசா தெரிவித்துள்ளார்.

அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில்,

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்கின்ற பிரச்னையை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தமது தேர்தல் விஞ்ஞாபனம் மூலம் வெளிக்கொண்டு வர வேண்டும்.

தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்கள் மட்டுமல்ல, அனைத்து வேட்பாளர்களும் வடக்கு, கிழக்கிலுள்ள கடற்றொழிலாளர்களின் பிரச்னையை வெளிக் கொண்டு வந்து அதற்கான தீர்வு என்ன என்பதை தேர்தல் விஞ்ஞாபனம் மூலம் வெளிப்படுத்த வேண்டும் - என்றும் அவர் கூறினார். (ஐ)

# ஜே. வி. பியின் தாதியர் மாநாட்டில் தேர்தல் விதிகள் மீறப்படவில்லை!

## தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 31

ஜே. வி. பியின் அரசியல் கூட்டணி என அழைக்கப்படும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்கவின் தலைமையில் நடைபெற்ற அகில இலங்கை தாதியர் மாநாட்டில் அரச தாதியர்கள் சீருடையில் கலந்து கொண்டமை தேர்தல் விதிமுறைகளை மீறுவதாக அமையாது என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பொது ஊழியர்களை நிர்வகிக்கும் தாபன விதிக் கோவையின் கீழ் அத்தகைய பங்கேற்பு அனுமதிக்கப்படுகிறது.

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க தலைமை கடந்த ஞாயிற்றுக்கிழமை மஹரகம பிரதேசத்தில் அகில இலங்கை தாதியர் மாநாடு நடைபெற்றது. இதில், தேர்தல் பிரசார நோக்கில் நடந்த இந்த நிகழ்வில் அரச தாதியர்கள் தமது சீருடையில் கலந்துகொண்டமை தவறானது என்று தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் தேர்தல் ஆணைக்குழுவுக்கு கடிதம் மூலம் அறிவித்தது.

இவ்வாறான பின்னணியிலேயே, தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு அரச தாதியர்கள் சீருடையில் கலந்து கொண்டமை தேர்தல் விதிமுறைகளை மீறுவதாக அமையாது என்று தெரிவித்துள்ளது. (ஐ)

# மைத்திரி உள்ளிட்டோருக்கு எதிரான தடை மேலும் நீடிப்பு

கொழும்பு, ஜூலை 31

சிறீ லங்கா சுதந்திர கட்சியின் முன்னாள் தலைவர் மைத்திரிபால சிறிசேன உட்பட மகிந்த அமரவீர, லசந்த அழகியவண்ண, துமிந்த திஸாநாயக்க ஆகியோருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட தடை உத்தரவை மேலும் நீடிக்க கொழும்பு மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்குகள் நேற்று செவ்வாய்க்கிழமை விசாரணைக்காக மீளஅழைக்கப்பட்டதை அடுத்து கொழும்பு மாவட்ட நீதிபதி சந்துன் விதானவால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அதன்படி, ஒக்ரோபர் 9ஆம் திகதி வரை அதற்கான தடை உத்தரவு நீடிக்கப்பட்டது. முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் பதவிகளில் இருந்து தம்மை தன்னிச்சையாக நீக்க எடுத்த தீர்மானம் சட்டத்துக்கு முரணானது என மனுதாரர்களான லசந்த அழகியவண்ண, துமிந்த திஸநாயக்க, மகிந்த அமரவீர ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

அந்த தீர்மானங்களை செல்லுபடியாகாத தீர்மானமாக உத்தரவிடக்கோரி கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் அவர்கள் இந்த வழக்குகளை தாக்கல் செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 22.4 கோடி முட்டைகள் இதுவரை இறக்குமதி!

கொழும்பு, ஜூலை 31

அமைச்சரவையில் கடந்த மார்ச் 18ஆம் திகதி எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், இலங்கை அரச வர்த்தக (பல நோக்கு) கூட்டுத்தாபனத்தால் இதுவரைக்கும் 22 கோடியே 40 இலட்சம் முட்டைகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

இவற்றில் 95 சதவீதமானவை லங்கா சதொச விற்பனை வலையமைப்பின் மூலம் 37 ரூபாய்க்கு நுகர்வோருக்கு வழங்கப்பட்டன. முட்டை இறக்குமதிக்காக வழங்கப்பட்ட அனுமதி ஏப்ரல் 30ஆம் திகதியுடன் முடிவடைந்துள்ளது.

இதற்கமைய, எதிர்வரும் ரமழான் மற்றும் நத்தார் கொண்டாட்டக் காலங்களில் சந்தையில் முட்டை விலையை நிலைப்படுத்தவும் மற்றும் கேக் உள்ளிட்ட வெதுப்பக உற்பத்திகளுக்குத் தேவையான முட்டைகளை விநியோகிக்கவும் தேவையான முட்டை இறக்குமதிக்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# பங்காளி கட்சி தலைவர்களை நாளை சந்திக்கின்றார் சஜித்!

கொழும்பு, ஜூலை 31

ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணியில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சிளின் தலைவர்களை விசேட சந்திப்புக்கு கூட்டணியின் தலைவரான சஜித் பிரேமதாஸ அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த சந்திப்பு நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான புதிய கூட்டணி எதிர்வரும் 8 ஆம் திகதி அமைக்கப்படவுள்ளது. அன்றைய தினம் புரிந்துணர்வு உடன்படிக்கையும் கைச்சாத்திடப்படவுள்ளது.

எனவே, குறித்த உடன்படிக்கை ஜனாதிபதி தேர்தலுக்கான தேர்தல் விஞ்ஞாபனம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடவே இந்த விசேட சந்திப்பு நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரமுனவின் 75 எம். பிக்கள் ரணிலுக்கு ஆதரவு தெரிவிப்பு

## வஜிரவின் வீட்டில் நடந்த சந்திப்பில்

கொழும்பு, ஜூலை 31

**சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் 75 பேர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளனர்.**

ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்த்தனவின் கொழும்பிலுள்ள வீட்டில் நேற்று முன்தினம் இரவு சந்தித்து அவர்கள் தமது ஆதரவை வெளிப்படுத்தினர் என்று சிங் கள நாளிதழ் ஒன்று தெரிவித்துள்ளது.

துணை சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ, பிரசன்ன ரணதுங்க, மகிந்தானந்த அளுத்கமகே, கஞ்சன விஜயசேகர, ரமேஷ் பத்திரண, எஸ் பி. திஸநாயக்க, கனக ஹேரத், ஜானக வக்கும்புர, மொஹான் பிரியதர்ஷன, கீதா குமாரசிங்க உள்ளிட்டவர்கள் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த சந்திப்பில் பங்கேற்றவர்கள், ரணில் விக்கிரமசிங்கவின் ஜனாதிபதித் தேர்தல் வெற்றியை உறுதி செய்வதற்காக தாம் அர்ப்பணிப்புடன் செயல்படுவோம் என்று தெரிவித்தனர்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் மூலம் பாராளுமன்றத்துக்குத் தெரிவான 150 உறுப்பினர்கள் தற்போது ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதி செய்ய இணைந்துள்ளனர் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் தெரிவித்தார். (ஐ)

# தோட்டப்புற பாடசாலைகளின் உள்கட்டமைப்பு வசதிக்கு நிதி!

கொழும்பு, ஜூலை 31

இந்திய அரசின் உதவியுடன் தோட்டப் பாடசாலைகளின் 60 கோடி ரூபாய் செலவில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்திய அரசின் 30 கோடி ரூபாய் நிதியுதவியுடன் தோட்டப் பாடசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதாக இருந்தபோதும், இலங்கையில் நிலவிய பொருளாதார நெருக்கடியால் குறித்த கருத்திட்டத்தின் நன்கொடையை 60 கோடி ரூபாயாக அதிகரிப்பதற்கு இந்திய அரசு உடன்பாடு தெரிவித்துள்ளது.

இதற்கிணங்க, ஏற்புடைய ஆவணங்களில் கையொப்பமிடுவதற்காக கல்வி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ஐ)

# குளவி கொட்டால் 12 பேர் பாதிப்பு!

கொழும்பு, ஜூலை 31

குளவிக்கொட்டுக்கு இலக்காகி 12 பேர் எட்டம்பிட்டி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் பதுளை - எட்டம்பிட்டியில் நேற்று முன்தினம் மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குளவி கூட்டை கழுகு தாக்கியதால், குளவிகள் கலைந்து மனிதர்களை தாக்கின என்று தெரிவிக்கப்பட்டது. இதில், 4 ஆண்களும் 8 பெண்களும் குளவி கொட்டுக்கு இலக்காகினர். (ஐ)

# தேர்தலுக்கு தேவையான நிதியை திறைசேரி விடுவிப்பதற்கு தயார்!

## நிதி இராஜாங்க அமைச்சர்

கொழும்பு, ஜூலை 31

ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து தேர்தலுக்கான செலவுகள் அதிகரித்தாலும் அந்தத் தொகையை வழங்க திறைசேரி தயாராக உள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய அறிவித்துள்ளார்.

தேர்தல் ஆணையாளரின் கோரிக்கைக்கு அமைய தேர்தலுக்கானநிதி வழங்க திறைசேரி தயார். கடந்த வரவு - செலவுத் திட்டத்தில் தேர்தல் நடவடிக்கைகளுக்காக ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டதாகவும், பணப் புழக்கங்களுக்கிடையில் முரண்படாத வகையில் பணத்தை விடுவிப்பதற்கு பொருளாதாரம் நன்கு இணைக்கப்பட்டுள்ளது.

இதன்படி, தேர்தல் ஆணையாளர் பணிமனை சுமார் 800 கோடி ரூபாய் அண்ணளவான மதிப்பீட்டை திறைசேரிக்கு அனுப்பி வைத்துள்ளதுடன், அச்சிடுதல், பாதுகாப்பு, எரிபொருள், வாக்குப்பெட்டி தயாரிப்பு போன்ற எந்தவோர் அவசரத் தேவைக்காகவும் திறைசேரி பணத்தை விடுவிக்க தயாராக இருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு மற்றும் தேர்தலுக்கான வேறு செலவுகள் மதிப்பிடப்பட்ட தொகைக்கு மேலதிகமாக அதிகரித்தாலும், நிச்சயமற்ற செயல்பாடுகளுக்கு ஏற்ப தற்போது பணம் கையிருப்பில் உள்ளது. இதனால் மேலதிக செலவுகள் தொடர்பில் பிரச்னை ஏற்படாது எனவும் அமைச்சர் குறிப்பிட்டார். (ஐ)

# நீதித்துறையை கட்டுப்படுத்த ஜனாதிபதி ரணில் முயல்கிறார்!

## ஐக்கிய மக்கள் சக்தி சாடல்



கொழும்பு, ஜூலை 31

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது நிறைவேற்றதிகாரத்தைப் பயன்படுத்துகின்றார். வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள ஒரு பிரச்னைக்கு கலந்துரையாடி தீர்வு காண முடியாது. நீதிமன்றத்தின் இடைக்கால தடை உத்தரவுக்கு அனைவரும் மதிப்பளிக்க வேண்டும் - இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் பணிமனையில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியால் முன்னெடுக்கப்பட்ட பிரபஞ்சம், சக்வல போன்ற வேலைத் திட்டங்களை நிறுத்துமாறு தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது. அதனை நாம் ஏற்றுக் கொண்டுள்ளோம். ஆனால், அரசாங்கத்துக்கு இந்த சட்டம் ஏற்புடையது இல்லையா? ஹோமாகம பிரதேசத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சால் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டத்தில் ஜனாதிபதி கலந்து கொண்டது சரியா?

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் இவ்வாறான வேலைத் திட்டங்கள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்றன. எனவே, தேர்தல் ஆணைக்குழு இது தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும்.

சபாநாயகரும், பிரதம நீதியரசரும் பேசி தீர்மானிக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். இது தவறான விடயமாகும். வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள ஒரு பிரச்னைக்கு கலந்துரையாடி தீர்வு காண முடியாது. நீதிமன்றத்தின் இடைக்கால தடையுத்தரவுக்கு அனைவரும் மதிப்பளிக்க வேண்டும். மக்கள் பிரதிநிதிகள் அதனை மீறினால், மக்களும் அதனையே பின்பற்றுவர். நீதிமன்றத்தை கட்டுப்படுத்த ஜனாதிபதி தனது நிறைவேற்றதிகாரத்தைப் பயன்படுத்தியுள்ளார் - என்றார். (ஐ)

# வெளிநாடுகளிலுள்ள குற்றவாளிகளை இலங்கை அழைத்துவருவதில் சிக்கல்!

கொழும்பு, ஜூலை 31

சர்வதேச பொலிஸாரின் சிவப்பு அறிவிப்பு பட்டியலில் உள்ள இலங்கையர்களை நாடு கடத்துவதில் சவால்கள் ஏற்பட்டுள்ளதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சர்வதேச சிவப்பு அறிவிப்புகளின் கீழ் தேடப்படும் நபர்களை நாடு கடத்த இலங்கை அதிகாரிகள் பல நாடுகளுடன் பேச்சு நடத்தி வருகின்றனர். சர்வதேச பொலிஸாரின் 164 சிவப்பு அறிவித்தல்களையும், 100 நீல அறிவித்தல்களையும் உள்ளூர் பொலிஸார் பெற்றுள்ளனர்.

இவற்றில் தேடப்படும் இலங்கையர்களின் பலரின் பெயர் இடம்பெற்றமை கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், சந்தேக நபர்களை இலங்கைக்கு ஒப்படைப்பது சர்வதேச சட்டக் கோட்பாடுகள் மற்றும் ஒப்படைப்புச் சட்டங்கள் உட்பட சட்ட சவால்களை முன்வைக்கிறது.

மரண தண்டனை நடைமுறைப்படுத் தப்படாவிட்டாலும் இலங்கை குற்றவாளிகளை ஐரோப்பிய நாடுகளில் இருந்து நாடு கடத்துவதற்கும் தடையாக உள்ளது. நாடு கடத்தலுக்கு சந்தேக நபர் இருக்கும் நாட்டுடன் ஒப்பந்தம் தேவைப்படுகின்றது. அத்தகைய ஒப்பந்தம் இல்லாமல், நாடு கடத்துவது கடினமாகவோ அல்லது சாத்தியமற்றதாகவோ இருக்கலாம்.

164 சிவப்பு அறிவிப்புகளில், 50இற்கும் மேற்பட்ட தேடப்படும் குற்றவாளிகளை இலக்காகக் கொண்டுள்ளன, அவர்களில் பலர் ஐக்கிய அரபு எமிரேட்ஸில் பதுங்கியிருக்கின்றனர் என்று கூறப்படுகின்றது.

பயங்கரவாதம், மோசடி மற்றும் பணமோசடி ஆகிய குற்றங்களுக்காக தேடப்படும் நபர்கள் சிவப்பு பட்டியலில் இடம்பெற்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், சில மத்திய கிழக்கு நாடுகளுடன் நாடு கடத்தல் ஒப்பந்தங்கள் தொடர்பில் பேச்சு நடத்துமாறு பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. அமெரிக்கா, துருக்கி, உக்ரைன், ரஷ்யா, வியட்நாம், சீனா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய நாடுகளுடன் இலங்கை நாடு கடத்தல் ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளது. (ஐ)

# ரூ. 20 இலட்சம் மோசடி செய்த அதிவேக வீதியின் அதிகாரிகள்

கொழும்பு, ஜூலை 31

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் கடமையாற்றிய 16 அதிகாரிகள் கடந்த 2 வருடங்கள் மற்றும் 8 மாதங்களில் 20 இலட்சம் ரூபாய்க்கும் அதிகமான தொகையை மோசடி செய்துள்ளனர் என்று தேசிய கணக்காய்வு பணிமனை வெளியிட்டுள்ள சமீபத்திய கணக்காய்வு அறிக்கையில் தெரியவந்துள்ளது.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் தற்போது பயன்பாட்டில் உள்ள கட்டண முறையானது 2011 ஆம் ஆண்டு தற்காலிகமாக நிறுவப்பட்ட ஓர் அமைப்பாகும். பின்னர் 2023 ஆம் ஆண்டு இறுதி வரையிலும் நவீன தொழில்நுட்பத்தின்படி பணம் செலுத்தக்கூடிய மென்பொருள் அமைப்பை ஏற்படுத்த வீதி அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை எடுக்காத காரணத்தால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக கணக்காய்வு மூலம் தெரியவந்துள்ளது.

இதேவேளை, மோசடிகளை குறைப்பதற்காக தானியங்கி கதவுகளை திறக்கும் முறைமை ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை கணக்காய்வு பணிமனைக்கு குறிப்பிட்டுள்ளது. (ஐ)

# வத்தளையில் தீ விபத்து; முதியவர் ஒருவர் மரணம்!

கொழும்பு, ஜூலை 31

கொழும்பு புறநகர் பகுதியான வத்தளையில் வீடொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்றுமுன்தினம் இரவு மூன்று மாடிகள் கொண்ட வீட்டின் இரண்டாவது மாடியில் உள்ள அறை ஒன்றில் இந்தத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்தத் தீ விபத்தில் உயிரிழந்தவர் 90 வயது முதியவர் என்று தெரிவிக்கப்பட்டது. வீட்டிலிருந்தவர்கள் வெளியில் சென்றிருந்த - முதியவர் மட்டும் தனித்திருந்த நேரத்தில் இந்தத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்துக்கான காரணம் கண்டறியப்படவில்லை. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐஸ் போதைப்பொருளை நுகர்ந்த 20 வயதுக்குட்பட்ட நால்வர் கைது!

கல்முனை, ஜூலை 31

**நிறமூட்டும் தொழிற்சாலையில் ஐஸ் போதைப்பொருளை நுகர்ந்த 17 வயது முதல் 20 வயதுக்குட்பட்ட நால்வரை கைது செய்த பெரிய நீலாவணை பொலிஸார் விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர்.**

அம்பாறை மாவட்டம் பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மருதமுனை பகுதியிலுள்ள நிறமூட்டும் தொழிற்சாலையில் நீண்ட கால மாக போதைப்பொருள் பாவனை இடம்பெற்று வருவதாக பொலி ஸாருக்கு திங்கட்கிழமை இரவு இரகசிய தகவல் கிடைக்கப் பெற்றது.

இதற்கமைய செயல்பட்ட பெரிய நீலாவணை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பொலிஸ் பரிசோதகர் ஜே. எஸ். கே. வீரசிங்க தலைமையிலான பொலிஸார் அங்கு சென்று சோதனை மேற்கொண்டதுடன் ஐஸ் போதைப்பொருளை நுகர்ந்த நால்வரை கைது செய்த னர்.

இவ்வாறு கைது செய்யப் பட்ட நால்வரும் 20, 18, 17, 17 வயதுடையவர்கள் என்பது டன் சந்தேக நபர்கள் வசமிருந்து மீட்கப்பட்ட போதைப்பொ ருட்களை சட்ட நடவடிக்கைக் காக நீதிமன்றத்தில் பாரப்படுத் தவுள்ளதாக பொலிஸார் கூறி னர்.

(எ)



# அல் அஷ்ரப் கல்லூரிக்கு சுற்றுமதில் அமைப்பு

சம்மாந்துறை, ஜூலை 31

திகாமடுல்ல மாவட்ட பாரா ளுமன்ற உறுப்பினரும், சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவருமான எச். எம். முகம்மட் ஹரீஸின் முயற்சியின் பயனாக ஜனாதிபதியின் விசேட நிதி ஒதுக்கீட்டில் சம்மாந்துறை அல் - அஷ்ரப் மத்திய கல்லூ ரிக்கு சுற்றுமதில் அமைக்க 2 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதோடு, மதில் அமைக்கும் பணிகளும் ஆரம் பித்து வைக்கப்பட்டன. (எ)



# மண்முனையில் விவசாய நவீனமயமாக்கல் திட்டம்

மண்முனை, ஜூலை 31

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவின் தொலைநோக்கு பார் வையின் கீழ் விவசாயம் மற்றும் விவசாயிகளை அபிவிருத்தி செய்வதற்கான விவசாய நவீன மயமாக்கல் திட்டம், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் மட்டக்க ளப்பு மண்முனை தெற்கில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

விவசாய சங்கங்கள் தங்களு டைய மரக்கறிகள் மற்றும் பழங் களை சேமித்து வைத்து நல்ல விலையைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் மண்முனை தெற்கில் குளிர்சாதனக் கிடங்கு கள் ஆளுநரால் திறந்து வைக் கப்பட்டன.

இந்த நிகழ்வில் இராஜாங்க அமைச்சரும், மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப் பினருமான எஸ். வியாழேந்தி ரன் உட்பட அரச அதிகாரிக ளும் கலந்து கொண்டனர்.

(எ)

# நற்பிட்டிமுனை குளக்கரையில் தினமும் குவிக்கப்படும் குப்பை

## குடியிருப்பாளர்கள் அசௌகரியம்

கல்முனை, ஜூலை 31

கல்முனை மாநகர சபைக் குட்பட்ட நற்பிட்டிமுனை குளப்பகுதியில் தினமும் ஆடு மாடு மற்றும் கோழிக்கழிவுகள் கொட்டப்பட்டு வருகின்றன.

குறிப்பாக தாளவெட்டு வான் சந்தியில் இருந்து நற்பிட் டிமுனை நோக்கிச் செல்லும் பழைய இலங்கை மின்சார சபை வீதியிலுள்ள குளக்கரையில் தினமும் குப்பைகள் கொட்டப் பட்டு வருகின்றன.

இதனால் அந்தப் பகுதியில் உள்ள மக்கள் பெரிதும் பாதிக் கப்பட்டுள்ளனர். அது மாத்தி ரமல்லாமல் அந்தச் சூழல் பாதிக் கப்பட்டு மாசடைந்துள்ளது.

இதனை அந்தப் பகுதி குடி யிருப்பாளர்கள் பல தடவைகள் கல்முனை மாநகர சபையிட



மும் பொதுச் சுகாதார பரிசோத கரிடமும் முறையிட்டும் இது வரை எந்தவொரு நடவடிக்கை யும் எடுக்கப்படவில்லை என்று குடியிருப்பாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

எனவே, குப்பைகள் கொட் டப்படுவதைத் தடுக்க கல்முனை மாநகர சபை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(எ)

# "ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பாராளுமன்ற தெரிவுக்குழு தேவை"

கல்முனை, ஜூலை 31

முஸ்லிம் மக்களின் ஜனாஸாக் களை எரித்தமை தொடர்பில் பாராளுமன்றத் தெரிவுக்குழு தேவை என்று முஸ்லிம் பாரா ளுமன்ற உறுப்பினர்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள் ளது.

தகனம் தொடர்பில் தீர்மா னத்தை எடுத்த குழு உறுப்பினர் களிடம் விசாரணை நடத்தி பாதிக்கப்பட்ட முஸ்லிம் சமூகத் துக்கு நியாயத்தை பெற்றுக் கொடுக்க ஜனாதிபதித் தேர்த லுக்கு முன்னர் பாராளுமன்றத் தெரிவுக்குழுவை நியமிக்க வேண்டும். அநீதியான சம்ப வத்தை செய்த குழுவுக்கு எதி ராக சட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு சபாநாயகரிடம் சகல முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றிணைந்து கோரிக்கை விடுப்பதற்கும், ஜனா ஸாக்களை தகனம் செய்வது தொடர்பான தீர்மானத்தை எதிர்த்து முஸ்லிம் சமூகத்துக்கு நீதி கிடைக்க நடவடிக்கை எடுக்குமாறும் கோரி ஜனாதி பதி செயலணி முன்னாள் உறுப் பினர் ஐ. ஏ. கலீலூர் ரஹ்மான், பாராளுமன்றத்தை பிரதிநிதித் துவப்படுத்தும் கட்சித் தலைவர் கள், அமைச்சர் மற்றும் பாரா ளுமன்ற உறுப்பினர்களுக்கு மகஜரொன்றை அனுப்பியுள் ளார்.

அந்த மகஜரில், உடல் உறுப் புகளை தகனம் செய்தல் மற்றும் உடல் உறுப்புகளை தானம் செய்வது தொடர்பாக அறிவிக் கப்பட்டுள்ள புதிய சட்ட விதி முறைகள் மற்றும் கோவிட் சட லங்களை தகனம் செய்வது தொடர்பாக கடந்த காலங்க ளில் பாராளுமன்றத்தில் பல விவாதங்கள் நடைபெற்றது டன், அங்கு முஸ்லிம் பாராளு மன்ற உறுப்பினர்களின் கருத்துக் களுக்கும் மதிப்பளிக்கப்பட்டது. ஈஸ்டர் தாக்குதலுக்குப் பின்னர் பாராளுமன்றத்தில் ஏற்படுத்தப் பட்ட பாராளுமன்றத் தெரிவுக் குழு போன்று ஜனாஸா எரிப்பை விசாரிக்கவும் பாராளுமன்றத் தெரிவுக்குழு வேண்டும் என்று முஸ்லிம் எம். பிக்கள் கூட்டு கோரிக்கையை இதுவரை முன் வைக்காமை வருத்தமளிக்கிறது. உடல்களை தகனம் செய்ய திட் டமிட்ட குழுவுக்கு பின்னால் கண்ணுக்குத் தெரியாத சக்தி இருக்கிறதா? என்பதை ஆராய்ந்து பார்ப்பது நாட்டுக்கு நல்லது என்றும் அவர் குறிப்பிட்டுள் ளார்.

# மட்டக்களப்பில் குளத்து மீன்பிடி அதிகரித்தது

மட்டக்களப்பு, ஜூலை 31

மட்டக்களப்பு மாவட்டத் தில் கடும் வறட்சி காரணமாக குளத்து மீன்பிடி அதிகரித்துள் ளதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

குளங்களில் உற்பத்தியாகும் பனையான், விரால், செல்வன் போன்ற மீனினங்கள் மீனவர்க ளின் வலைகளில் பெரிதும் பிடி படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

குளங்கள் வற்றி வருவதனால் குளத்தில் உற்பத்தியாகும் குறித்த மீன்களை மிக இலகுவாக கரை களில் இருந்தே பிடிக்கக் கூடிய தாக இருப்பதாகவும் மீனவர்கள் கூறினர்.

மாவட்டத்தில் விவசாய பிர தேசங்களான கொக்கட்டிச் சோலை, வாகரை, வவுணதீவு, வெல்லாவெளி உட்பட பல பிரதேச செயலகப் பிரிவுகளில் இவ்வாறு நன்னீர் மீன்பிடித் தொழில் அதிகரித்திருக்கிறது.



# 10 இலட்சம் மரக்கன்றுகளை நடும் பாடசாலை மாணவிக்கு கௌரவம்



கல்முனை, ஜூலை 31

பசுமை மீட்சிப் பயணம் என்ற நோக்குடன் 10 இலட்சம் மரக்கன்றுகளை நடுவதற்கு உரிய அதிகாரிகளின் அனுமதி பெற்று தேசிய ரீதியாக தனது செயல்பாடுகளை முன்னெடுத் துச் செல்லும் பாடசாலை மாணவி மின்மினி மின்ஹாவின் செயல்பாடுகளைக் கௌர வித்து விருது வழங்கப்பட்டது.

கல்முனை அல் பஹ்றியா மகா வித்தியாலயத்துடன் இணைந்து கல்முனை பிர்லி யன்ட் விளையாட்டுக் கழகம் நடத்திய விசேட நிகழ்வில் குறித்த மாணவிக்கு பிர்லியன்ட் சிறுவர் விருது வழங்கிக் கௌர விக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பாடசாலை அதிபர் எம். ஏ. சலாம், பிரதி அதிபர் ஃபிநோஸா, உதவி அதிபர்களான எம். ஆர். எம். முஸாதிக், எம். எச். ஐ. இஸ்ஸத், யூ. எல். ஹிதாயா, எம். எப். நஸ்மியா, கல்முனை பிர்லியன் விளையாட்டுக் கழக தலைவர் கள், எஸ். எம். பளீல் மற்றும் கழகத்தின் தலைவரும் ஆரம்பப் பிரிவு பொறுப்பாசிரியருமான வி. நளீம் ஆகியோருடன் ஆசி ரியர்களும் கலந்து சிறப்பித்த னர்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 ஆயிரம் மாணவர்கள் காஸாவில் உயிரிழப்பு!

## இஸ்ரேல் தாக்குதலில் 400 ஆசிரியர்கள் பலி


காஸா, ஜூலை 31

**காஸா பகுதியில் இஸ்ரேல் இராணுவம் நடத்திய தாக்குதலில் இதுவரை 10, 000 மாணவர்கள் மற்றும் 400 ஆசிரியர்கள் பலியானதாக பலஸ்தீன கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.**

நாளுக்கு நாள் காஸா போர் தீவிரமடைந்து வரும் நிலையில், இஸ்ரேலிய இராணுவம் புதிய வெளியேற்ற உத்தரவுகளை பிறப்பித்துள்ளது. இந்த நிலையில், மத்திய காஸா பகுதியில் உள்ள புரேஜ் மற்றும் நுசிராத் அகதிகள் முகாம்களில் இருந்து பலஸ்தீனர்கள் வெளியேறி வருகின்றனர். 86 சதவீத காஸா மக்கள் தங்கள் இருப்பிடங்களில் இருந்து வெளியேறிவிட்டனர் என்று பலஸ்தீன அகதிகளுக்கான ஐ. நா. அமைப்பு தெரிவித்துள்ளது.

காஸாவின் இரண்டு முக்கிய தெற்கு நகரங்களான ரபா மற்றும் கான் யூனிஸ் ஆகியவற்றில் நாளுக்கு நாள் மோதல் அதிகரித்த வண்ணம் உள்ளது என அந்தப் பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். கடந்த ஆண்டு, ஒக்டோபர் 7 ஆம் திகதி அன்று தொடங்கிய காஸா மீதான இஸ்ரேலின் போரில் 39, 363 பேர் இதுவரை உயிரிழந்தனர். மேலும் 90, 923 பேர் காயமடைந்துள்ளனர். ஹமாஸ் தலைமையிலான தாக்குதல்களின் போது இஸ்ரேலில் 1,139 பேர் கொல்லப்பட்டனர். 200இற்கும் மேற்பட்டோர் சிறைபிடிக்கப்பட்டனர்.

இதேவேளை, காஸாவில் போர் தொடங்கியதில் இருந்து, தற்போது வரை சுமார் 10, 000 மாணவர்கள், 400 ஆசிரியர்களும் கொல்லப்பட்டதாக பலஸ்தீன கல்வி அமைச்சகம் தெரிவித்துள்ளது. காஸாவில் உள்ள 76 சதவீதத்துக்கும் அதிகமான பாடசாலைகள் செயல்படுவதற்கு முழு புனரமைப்பு தேவை என்று ஐ. நா. தெரிவித்துள்ளது. (ஏ)



பஹாமாஸில் ஆழ்கடலில் சிரிக்கும் சுறாவை மிகவும் தத்ரூபமாக படம் எடுத்து புகைப்படக் கலைஞர் ஒருவர் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

# பிரான்ஸில் கேபிள் சேதம் இணைய சேவை பாதிப்பு

பாரிஸ், ஜூலை 31

பிரான்ஸில் பல்வேறு இடங்களில் கேபிள்கள் சேதமடைந்ததால் இணைய சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன. இதனை பொலிஸார் உறுதி செய்துள்ளனர். இருப்பினும் இதனால் பாரிஸ் நகரம் பாதிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அங்கு விஷமிகளின் தீவைப்பு உள்ளிட்ட சதிவேலைகள் காரணமாக அதிவேக ரயில் சேவைகள் கடந்த வெள்ளிக்கிழமை பாதிக்கப்பட்டன. பாரிஸ் நகரில் ஒலிம்பிக் தொடக்க விழாவுக்கு சில மணி நேரத்துக்கு முன் ஏற்பட்ட இந்தப் பாதிப்பால் இலட்சக்கணக்கான பயணிகள் சிரமத்துக்குள்ளாகினர். இந்தச் சூழலில் அடுத்த மூன்று நாட்களில் இணைய கேபிள்கள் சேதமடைந்துள்ளன. (ஏ)



# கேரளாவில் நிலச்சரிவு இதுவரை 40 பேர் பலி!

திருவனந்தபுரம், ஜூலை 31

இந்தியாவின் கேரள மாநிலத்தில் கனமழை பெய்து வரும் நிலையில் வயநாட்டில் நேற்று அதிகாலை பயங்கர நிலச்சரிவு ஏற்பட்டது. இதில் சிக்கி இதுவரை 40 பேர் பலியாகினர்.

கேரளாவில் தென்மேற்கு பருவமழை தீவிரடைந்துள்ளது. கடந்த சில வாரங்களாக அங்கு கனமழை வெளுத்து வாங்கி வருகிறது. அந்த வகையில், கேரளாவின் வயநாடு பகுதியில் நேற்று முன்தினம் இரவு மிகக் கனமழை பெய்தது. இந்த கனமழையைத் தொடர்ந்து அதிகாலையில் நிலச்சரிவு ஏற்பட்டது. நேற்று அதிகாலை 2 மணியளவில் சூரல்மலை பகுதியில் முதலில் பயங்கரமான நிலச்சரிவு ஏற்பட்டது.

இதனையடுத்து, அதிகாலை 4. 30 மணிக்கு இரண்டாவதாக மற்றொரு பெரும் நிலச்சரிவு ஏற்பட்டது. அடுத்தடுத்து ஏற்பட்ட நிலச்சரிவுகளால் வைத்திரி, வெள்ளேரிமலை, மேப்பாடி உள்ளிட்ட பகுதிகளில் பயங்கர பாதிப்பு ஏற்பட்டது. அட்டமலையில் இருந்து முண்டகை பகுதியை சென்றடைவதற்கான ஒரே ஒரு பாலமும் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டது.

இதனால், தனித்தீவில் சிக்கியது போல ஆயிரக்கணக்கான மக்கள் மாட்டிக்கொண்டனர். நிலச்சரிவில் சிக்கி இதுவரை பலியானோர் எண்ணிக்கை 40 ஆக உயர்ந்தது. பாதிக்கப்பட்ட மக்களை ஹெலிகொப்டர் மூலமாக மீட்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. பலரின் நிலை என்னவென்று தெரியாததால் பலி எண்ணிக்கை மேலும் உயரலாம் என்று அஞ்சப்படுகிறது. (ஏ)

# 3 ஆவது முறையாக நிக்கோலஸ் வெற்றி

## ஜனாதிபதித் தேர்தல் முடிவு குறித்து எதிர்க்கட்சிகள் கடும் குற்றச்சாட்டு



கராகஸ், ஜூலை 31

வெனிசுலா ஜனாதிபதித் தேர்தலில் நிக்கோலஸ் மதுரோ மீண்டும் வெற்றி பெற்றுள்ளதாக அந்த நாட்டு தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. இந்த நிலையில், தேர்தல் முடிவுகள் மக்களின் வாக்குகளைப் பிரதிபலிக்கவில்லை என்று எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

வெனிசுலா நாட்டில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்று முடிந்தது. இதில், தற்போதைய ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ மீண்டும் போட்டியிட்டார். அவரை எதிர்த்து எதிர்க்கட்சிகள் கூட்டணி சார்பில் எட்முண்டோ கோன்சலேஸ் களமிறங்கினார். இவர்களுக்கிடையே நேரடி போட்டி நிலவியது. இதில் நிக்கோலஸ் மதுரோ வெற்றி பெற்று மூன்றாவது முறையாக ஜனாதிபதியாக தெரிவானார்.

இதேவேளை, தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் முடிவுகள் மோசடியான ஒன்று என எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

எதிர்க்கட்சி வேட்பாளர் எட்முண்டோ கோன்சலேஸ் 70 சதவீத வாக்குகளை பெற்றுள்ளதாகவும், அவர்தான் நியாயமான முறையில் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டவர் என்றும் எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளன.

"ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் அறிவிக்கப்பட்ட முடிவு வெனிசுலா மக்களின் விருப்பத்தையோ அல்லது வாக்குகளையோ பிரதிபலிக்கவில்லை" என்று அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் அன்ரனி பிளிங்கன் தெரிவித்தார். இதேவேளை, வெனிசுலாவின் ஜனாதிபதியாக மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ள நிக்கோலஸ் மதுரோவுக்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் வாழ்த்து தெரிவித்துள்ளார். (ஏ)

# வடகொரியாவின் அடுத்த ஜனாதிபதி ஜூஏ

சியோல், ஜூலை 31

வடகொரியா ஜனாதிபதி கிம் ஜாங் உன்னுக்கு பிறகு அடுத்த அரசியல் வாரிசாக அவரது மகள் ஜூஏ ( வயது - 12) வரலாம் என தென்கொரிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கிம் ஜாங் உன் ஜனாதிபதி பொறுப்பிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக விலகி வருவதாகவும், தன் 12 வயது மகள் ஜூஏ என்பவரை நாட்டின் அடுத்த ஜனாதிபதியாக்க திட்டமிட்டு,



இப்போதே பயிற்சியளித்து வருகிறார். பொது இடங்களுக்கு தன் மகளையும் உடன் அழைத்துச் செல்கிறார் என்றும் தென்கொரிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ஏ)

# பழங்குடியின பிரிவினரிடையே பாகிஸ்தானில் பயங்கர கலவரம்

## 42 பேர் உயிரிழப்பு, 170 பேர் படுகாயம்

கராச்சி, ஜூலை 31

பாகிஸ்தானில் பழங்குடியின கிராமங்களில் பயங்கர கலவரம் வெடித்தது. இந்த நிலையில், 42 பேர் உயிரிழந்தனர். 170 பேர் படுகாயமடைந்தனர்.

பாகிஸ்தானின் கைபர் பாக்துன்க்வா மாகாணம், உப்பர் குர்ரம் மாவட்டத்தில் இரண்டு பழங்குடியின பிரிவினரிடையே நில உரிமை தொடர்பில் நீண்டகாலமாக பிரச்னை நீடித்து வருகிறது. இந்த நிலையில், இரு தரப்பினரும் பயங்கர ஆயுதங்களால் தாக்கிக் கொண்டனர். புசேரா கிராமத்தில் ஏற்பட்ட இந்தக் கலவரம், மற்ற கிராமங்களுக்கும் பரவியது. அங்கு பதுங்கு குழிகள் அமைத்து எதிரிகள் மீது தாக்குதல் நடத்தினர். இதனால், அந்தப் பகுதிகள் போர்க்களமாக காட்சியளித்தன.

இந்த வன்முறைத் தாக்குதல்களில் இரு தரப்பிலும் உயிரிழப்பு ஏற்பட்டது. நூற்றுக்கணக்கானோர் படுகாயமடைந்தனர். இதனையடுத்து இரு தரப்பினருக்கிடையே அரசு சார்பில் அமைதி பேச்சுகள் நடத்தப்பட்டன. 5 நாட்கள் தொடர் மோதலுக்குப் பிறகு சண்டை நிறுத்தம் அறிவிக்கப்பட்டது. ஆனால், நேற்று முன்தினம் இரவு இரு தரப்பினரும் ஒப்பந்தத்தை மீறி மீண்டும் தாக்குதலில் ஈடுபட்டனர். தொடர்ந்து துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இதனால் பழங்குடியின கிராமங்களில் பதற்றம் நிலவுகிறது.

இந்தக் கலவரத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 42 ஆக அதிகரித்தது. அத்தோடு 170 பேர் படுகாயமடைந்தனர்.

கலவரத்தை தடுத்து நிறுத்தி அமைதியை ஏற்படுத்துவதற்கு பாதுகாப்புத்துறை அதிகாரிகள் தொடர்ந்து முயற்சி மேற்கொண்டு வருகின்றனர். பிரச்னைகளை பேசி தீர்த்துக்கொள்ளலாம் என இரு தரப்பினரையும் வலியுறுத்தியுள்ளனர். (ஏ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோவிட் வழிகாட்டலை மீண்டும் பின்பற்றுங்கள்

## சுகாதார அதிகாரிகள் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 31

**நாட்டில் இன்புளுவன்சா வைரஸ் காய்ச்சல் வேகமாக அதிகரித்து வருகிறது. அத்துடன், கோவிட் தொற்றும் அஞ்சக்கூடிய அளவில் இல்லாமல் கோவிட் தொற்றும் பரவுகிறது. எனவே, கோவிட் பாதுகாப்பு வழிகாட்டுதல்களை பின்பற்றுமாறு சுகாதார அதிகாரிகள் பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.**

இது தொடர்பில் சிறுவர் மருத்துவ நிபுணர் லக்குமார் பெர்னாண்டோ தெரிவிக்கையில்,

சிறுவர்கள், முதியவர்கள், நோயெதிர்ப்பு சக்தி குறைவானவர்கள் கோவிட் பாதுகாப்பு வழிகாட்டுதல்களை கட்டாயம் பின்பற்ற வேண்டும். "சிறுவர்கள் மற்றும் வயதானவர்கள் முகக் கவசங்களை அணிய வேண்டும், கைகளை நன்கு சுத்தமாக கழுவ வேண்டும், பொது போக்குவரத்து உள்ளிட்ட சன நெரிசலான இடங்களில் இடைவெளியை பேண வேண்டும்.

பாடசாலைகள், சிறுவர் பராமரிப்பு நிலையங்களில் வைரஸ் காய்ச்சல் அதிகளவு பரவுவதாக அடையாளம் காணப்பட்டுள்ளது. எனவே, பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் உடல்நிலையை உன்னிப்பாகக் கண்காணிக்க வேண்டும். ஏதேனும் அறிகுறிகள் தென்பட்டால் அவர்களை பாடசாலைகள் அல்லது குழந்தைகள் பராமரிப்பு நிலையங்களுக்கு அனுப்புவதைத் தவிர்க்க வேண்டும்.

காய்ச்சல், குளிர், தலைவலி, மூக்கு ஒழுகுதல் அல்லது அடைப்பு, தசை அல்லது உடல் வலி, குமட்டல், சோர்வு, பசியின்மை மற்றும் தொண்டை வலி ஆகியவை இன்புளுவன்ஸா வைரஸ் காய்ச்சல் அறிகுறிகளாகும் - என்றார்.

இன்புளுவன்ஸா வைரஸ் காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்கள் அதிகரித்துள்ளனர் என்று அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் மருத்துவர் சம்மில் விஜயசிங்க உறுதிப்படுத்தியுள்ளார்.

கோவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கையும் சிறிதளவு அதிகரித்துள்ளதோடு, ஒரு சில உயிரிழப்புகளும் பதிவாகியுள்ளன.

பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் கோவிட் தடுப்பூசி போடாதவர்கள். சில உயிரழப்புகளுக்கு நேரடியாக கோவிட் தொற்று காரணமாக இருக்கவில்லை. ஆனால் பி. சி. ஆர் பரிசோதனையில் கோவிட் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில், கொவிட் தொற்றாளர்கள் அதிகளவில் பதிவாகவில்லை என்பதால் மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை- என்றார். (ஐ)



ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கப் போவதில்லை என்று பெரமுன கட்சி அறிவித்த சில மணி நேரங்களில் சீன தூதரக நிகழ்வு ஒன்றில் முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ சகோதரர்கள் உரையாடிய தருணம்....!

# துப்பாக்கி வெடித்ததில் 7 வயது சிறுமி காயம்!

கொழும்பு, ஜூலை 31

துப்பாக்கி வெடித்ததில் 7 வயது சிறுமி ஒருவர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மாத்தளை - மக்குலுகஸ்வெவ பகுதியில் நேற்று முன்தினம் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சிறுமி வீட்டை சுத்தம் செய்யும் போது வேட்டைத் துப்பாக்கி நிலத்தில் விழுந்ததில் வெடித்தது. இதில், 7 வயதுச் சிறுமி படுகாயமடைந்தார்.

மாத்தளை பொலிஸார் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். அவர்களின் விசாரணையில் குறித்த துப்பாக்கி உள்நாட்டில் தயாரிக்கப்பட்டது என்று தெரிய வந்துள்ளது. (ஐ)

# பிராந்திய பாதுகாப்பு சவாலை முறியடிப்பதற்காக இணைக!

## "ஆசியான்" நாடுகளுக்கு இலங்கை அழைப்பு

கொழும்பு, ஜூலை 31

பிராந்திய பாதுகாப்புடன் தொடர்புடைய சவால்களை முறியடிப்பதற்கு ஆசிய - பசுபிக் பிராந்திய நாடுகளை ஒன்றிணையுமாறு ஆசியான் அமைப்பின் 31ஆவது அமைச்சர்கள் மட்ட மாநாட்டில் உரையாற்றிய வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய அழைப்பு விடுத்துள்ளார்.

ஆசியான் அமைப்பின் 31ஆவது அமைச்சர்கள் மாநாடு லாவோஸில் நடைபெற்றது. இதில், இலங்கை சார்பில் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய தலைமையிலான குழு பங்கேற்றது.

இங்கு உரையாற்றிய இராஜாங்க அமைச்சர்,

செயற்கை நுண்ணறிவு உள்ளடங்கலாக வளர்ச்சியடைந்து வரும் தொழில்நுட்பங்களின் விளைவாக ஏற்படக்கூடிய பாதுகாப்பு துறைசார் சவால்கள் உள்ளிட்ட பல்துறைசார் பிரச்னைகளுக்கு முறையான தீர்வை கண்டறிவதை முன்னிறுத்தி ஆசிய - பசுபிக் பிராந்திய நாடுகளை ஒன்றிணையுமாறு அழைப்பு விடுத்தார். அத்துடன், சமாதானம், பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்பு என்பவற்றை உறுதிசெய்வதற்கு ஆசிய - பசுபிக் பிராந்தியத்தால் மேற்கொள்ளப்பட்டுவரும் முயற்சிகளை தக்கவைத்துக் கொள்வதற்கு சைபர் மற்றும் வலையமைப்பு பாதுகாப்புக்கட்டமைப்பு சார்ந்த சவால்களை உரியவாறு கையாள்வதும், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களை முறியடிப்பதும் அவசியமாகும் - என்றும் கூறினார். (ஐ)

# செழிப்பான இலங்கையை உருவாக்க அனைவரும் என்னுடன் இணையுங்கள்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க



கொழும்பு, ஜூலை 31

நாட்டை கட்டியெழுப்பும் கடினமான பயணத்தில் கட்சி அரசியலை விடுத்து தன்னுடன் இணைந்துள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, செழிப்பான இலங்கையை உருவாக்குவதற்கு ஏனையோரையும் தன்னுடன் இணையுமாறு அழைப்பு விடுத்துள்ளார்.

தனக்கு ஆதரவு தெரிவித்த ஏனைய கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவித்து ஜனாதிபதி விடுத்த அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தப் பயணத்தில் என்னுடன் இருந்த எம். பிக்களுக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். ஆரம்பத்திலிருந்தே என்னுடன் நின்றவர்களின் ஆதரவு நாட்டை மீட்பதற்கான முதல் படிகளை சாத்தியமாக்கியது.

நாடு நெருக்கடியில் இருந்த போது, எரிபொருள், மருந்து மற்றும் அத்தியாவசியப் பொருட்களுக்காக மக்கள் போராடும்போது என்னையும் எனது திட்டத்தையும் நீங்கள் நம்பினீர்கள்.

இப்போது எங்களுடன் இணைந்திருப்பவர்களின் ஆதரவு நாங்கள் செல்லும் நேர்மறையான திசையை காட்டுகிறது. கட்சி அரசியலை ஒதுக்கி வைத்துவிட்டு ஒன்றுபடுவதன் முக்கியத்துவத்தை நீங்கள் புரிந்துகொள்கிறீர்கள். ஒன்றாக, நாம் இன்னும் சாதிக்க முடியும்.

இன்னும் எங்களுடன் சேராத எம். பிக்களையும் வரவேற்க நாங்கள் தயாராக இருக்கிறோம்.

செழிப்பான, ஐக்கிய இலங்கையை கட்டியெழுப்புவதற்கான எமது பணி தொடர்கிறது. மேலும் அதனை நனவாக்க ஒவ்வொருவரும் தயாராக இருக்க வேண்டும்.

இந்த பயணம் எளிதானது அல்ல, ஆனால், ஒன்றாகச் சேர்ந்து அதனை இலகுவாக்கலாம். அனைவரும் ஒன்றிணைந்து நம்பிகையான இலங்கையை உருவாக்குவோம் - என்றார். (ஐ)

# உலகில் வேகமாக வளரும் துறைமுகமாக கொழும்பு!

கொழும்பு, ஜூலை 31

கப்பல் துறையின் முன்னணி ஆராய்ச்சி வெளியீடான அல்பாலைனர் உலகின் வேகமாக வளரும் துறைமுகமாக கொழும்பு துறைமுகத்தை முதல் காலாண்டில் குறிப்பிட்டுள்ளதாக கப்பல் துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் செயலாளர் கே. டி. எஸ். ருவன்சந்திர தெரிவித்துள்ளார்.

அத்துடன், 2024ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் கொழும்பு துறைமுகம் 50 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானத்தை ஈட்டியுள்ளதாக சுட்டிக்காட்டிய அவர், கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு தொழிற்சங்க நடவடிக்கைகள் அந்த முன்னேற்றத்தை எட்டுவதற்குத் தடையாக அமையவில்லை என்றும் கூறினார்.

இரண்டு வருட முன்னேற்றம் தொடர்பில் ஜனாதிபதி ஊடக மையத்தில் திங்கட்கிழமை நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் கூறினார்.

மேலும், 2024 ஆம் ஆண்டில் 23.6 வீதம் என்னும் வேகமான வளர்ச்சி வீதத்தைப் பதிவு செய்ததன் மூலம் கொழும்பு துறைமுகம் செயல்பாட்டு [illegible] திறனில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது.

பல்வேறு தொழிற்சங்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டபோதே இந்த முன்னேற்றத்தை அடைந்தோம். ஆனால், அவை எமது பணிக்கு இடையூறாக அமையவில்லை. 2023ஆம் ஆண்டில் இலங்கை துறைமுக அதிகாரசபை 10 கோடி அமெரிக்க டொலர் இலாபத்தைப் பதிவுசெய்துள்ளதுடன் 2024ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் மாத்திரம் 5 கோடி அமெரிக்க டொலர் இலாபம் ஈட்டியுள்ளது - என்றும் கூறினார். (ஐ)

# ஜனாதிபதி ரணில் ராஜபக்ஷக்களுடன் இணைவதை மக்கள் விரும்பவில்லை!

கொழும்பு, ஜூலை 31

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க ராஜபக்ஷக்களுடன் இணைந்து போட்டியிடுவதை விரும்பவில்லை என்று கருத்துக் கணிப்பில் தெரிய வந்துள்ளது.

கொழும்பு ஆங்கில நாளிதழான டெய்லிமிரர் நடத்திய கருத்துக் கணிப்பிலேயே இந்த விடயம் தெரிய வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவிலிருந்து விலகி அரசாங்கத்தில் இணைந்தவர்களை பஸில் ராஜபக்ஷ விமர்சித்துள்ள நிலையில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க ராஜபக்ஷக்களுடன் இணைந்து தேர்தலில் போட்டியிட வேண்டுமா என்ற கேள்விக்கு கருத்துக் கணிப்பில் கலந்துகொண்ட 1,645 பேரில் 76 வீதமானவர்கள் இணைந்து போட்டியிடுவதை விரும்பவில்லை என்று பதில் அளித்துள்ளனர்.

21 வீதமானவர்கள் ஆம் என தெரிவித்துள்ள அதேவேளை 3 வீதமானவர்கள் தெரியாது என்றும் பதில் அளித்துள்ளனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரிஸ்...

இலங்கைக்கு உயர் அங்கீகாரம் கிடைத்துள்ளது. பாரம்பரிய ஆடைக்கு அமைய முதலிடத்தை மங்கோலியா நாடு பிடித்துள்ளதுடன், இரண்டாவது இடத்தை மெக்சிக்கோவும் மூன்றாவது இடத்தை இலங்கையும் பெற்றுள்ளன. (ஐ)

## உண்மை...

தயாரிப்பதற்காக கடந்த 15ஆம் திகதி நடந்த அமைச்சரவை கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, சட்ட வரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்துக்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றுள்ளது. குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கவும் பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதியும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சரும் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரும் இணைந்து சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ஐ)

## விளக்கத்துக்கு...

கலந்தாய்வுக்கான திகதி அறிவிக்கப்பட்டது.

இதேவேளை, இந்த வழக்கை விரைந்து முடிவுறுத்த வசதியாக மாவை சேனாதிராசா, சிவஞானம் சிறீதரன், சண்முகம் குகதாசன், சீனித்தம்பி யோகேஸ்வரன் ஆகிய 4 எதிராளிகள் நேற்றைய தினம் தமது பதில் மனுக்களை தாக்கல் செய்தனர்.

ஏனைய நான்கு எதிராளிகளான எம். ஏ. சுமந்திரன், குலநாயகம், ப. சத்தியலிங்கம், இரத்தினவடிவேல் ஆகியோர் சார்பிலான பதில் மனுக்கள் கடந்த 19ஆம் திகதி வழக்கு தவணையின்போது நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ரூ.20லட்சத்...

மீட்கப்பட்டவர் மல்லாவி யோகபுரத்தைச் சேர்ந்த ஆனந்தராசா ஜீவன் (வயது 27) என்பவராவார்.

குறித்த இளைஞர் நேற்று முன்தினம் மாலை யோகபுரத்திலிருந்து பாண்டியன் குளத்துக்கு 20 இலட்சம் ரூபாய் பணத்துடன் தனியாகச் சென்றுள்ளார். கனடா செல்வதற்காக அந்தப் பணத்தை டொலராக மாற்றும் நோக்கிலேயே அவர் அந்தப் பணத்தைக் கொண்டு சென்றார் என்று கூறப்படுகின்றது.

இறுதியாக, இரவு 8.40 மணிக்கு தனது நண்பர்களுடன் கைபேசி வழியே தொடர்பு கொண்டிருந்தார். நீண்ட நேரமாகியும் அவர் வராததால் நண்பர்கள் அவரின் கைபேசிக்கு அழைப்பு எடுத்தனர். ஆனால், அவரின் கைபேசி அணைக்கப்பட்டிருந்தது. இதையடுத்து, அவரின் நண்பர்கள் அவரைத் தேடிச் சென்றனர்.

அதிகாலை 3 மணியளவில் பாண்டியன் குளத்தின் கரையில் அவரின் மோட்டார் சைக்கிள் மட்டும் விழுந்த நிலையில் காணப்பட்டது. இதைத் தொடர்ந்து நடத்தப்பட்ட தேடுதலில் இளைஞரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

மீட்கப்பட்ட சடலத்தில் பெருவிரலில் மட்டும் சிறு காயம் காணப்பட்டதாகக் கூறப்படுகிறது. அவர் கொண்டு சென்ற பணமும் அவர் அணிந்திருந்த நகைகளும் காணப்படவில்லை. இதனால், இது திட்டமிட்ட கொலையாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

நேற்று மாலை நீதிபதி சென்று பார்வையிட்ட பின்னர் சடலம் மீட்கப்பட்டு, பிரேத பரிசோதனைக்காக முல்லைத்தீவு மாவட்ட பொதுமருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டது.

முல்லைத்தீவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# நிலைப்பாட்டை மாற்றுக; மகிந்தவிடம் கோரிக்கை!

## பெரமுன எம். பிக்கள் விடுத்தனர்

கொழும்பு, ஜூலை 31

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து ஆதரவளித்துள்ள பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க வேண்டும் என்று கோரியுள்ளனர்.

ராஜபக்ஷ தனது நிலைப்பாட்டில் பெரும் மாற்றத்தை மேற்கொள்ள வேண்டும் ரணிலை ஆதரிக்க வேண்டும் அல்லது அதற்கான விளைவுகளை எதிர்கொள்ள வேண்டும் என்றும் அவர்கள் எச்சரித்துள்ளனர்.

கடந்ததிங்கட்கிழமை எடுத்த முடிவில் மகிந்த ராஜபக்ஷவின் கட்சி உறுதியாக இருந்தால் அடுத்த பாராளுமன்ற தேர்தலில் கட்சிக்கான ஆதரவு குறித்து மீள்பரிசீலனை செய்ய வேண்டியிருக்கும். ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கத் தவறினால் அது பொதுஜன பெரமுனவின் அழிவுக்கே வழிவகுக்கும் என்றும் எம். பிக்கள் கூறியுள்ளனர்.

# கொலை குற்றவாளிகள் நால்வருக்கு மரண தண்டனை

கொழும்பு, ஜூலை 31

கற்கள் மற்றும் பொல்லால் தாக்கி நபர் ஒருவரை கொலை செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள நால்வருக்குக் கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று மரண தண்டனை விதித்தது.

கொழும்பு, ஒருகொடவத்தை, பிரதேசத்தை சேர்ந்த நால்வருக்கே மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2013ஆம் ஆண்டு கொழும்பு, ஒருகொடவத்தை, சாந்தவத்தை பகுதியில் நபரொருவரை கற்கள் மற்றும் பொல்லால் தாக்கி கொலை செய்த சம்பவம் ஒன்று தொடர்பில் 6 பேருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கின் இரண்டாவது குற்றவாளி விசாரணையின் போது உயிரிழந்த நிலையில் போதியளவு ஆதாரம் இல்லாததால் ஆறாவது குற்றவாளி நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டார்.

இந்நிலையில், குற்றம்சாட்டப்பட்ட ஏனையவர்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட ஆதாரங்கள் அடிப்படையில் குற்றம் நிரூபிக்கப்பட்டதால் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

## பெரமுனவின்...

எமது ஆதரவு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கே. என்றும் சந்தர்ப்பவாத அரசியலில் ஈடுபட நாங்கள் விரும்பவில்லை. பொதுஜன பெரமுன சார்பில் வேட்பாளரை நிறுத்துவது என்ற முடிவு கட்சியின் நிறைவேற்றுக் குழுவில் எடுக்கப்பட்டது அல்ல. பொதுஜன பெரமுனவின் நிறைவேற்றுக் குழு ஜனநாயக ரீதியில் செயல்படவில்லை. நிறைவேற்றுக் குழுவே வேட்பாளரை நிறுத்தும் முடிவு செய்ததாகக் கூறப்படுவது வெறும் நாடகம் என்றும் அவர் கூறினார். (ஐ)

## ஒரே...

செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த அவர்,

“ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ, அனுரகுமார திஸநாயக்க, விஜயதாஸ ராஜபக்ச, சரத் பொன்சேகா ஆகியோர் நல்லாட்சி அரசாங்கத்தில் வலிமையானவர்கள்.

இவர்கள் ஐவருக்கும் பொதுவான காரணி ஒன்று உள்ளது. இவர்கள் நல்லாட்சியின் தலைவர்கள். ஏனெனில், அநுரகுமார திஸாநாயக்க நல்லாட்சி அரசாங்கத்தின் ஊழல் எதிர்ப்புக் குழுவின் தலைவராகவும் இருந்தவர். இன்றும் ஜனாதிபதியும் அநுரகுமார திஸநாயக்கவும் எங்களிடம் பைல் (கோப்பு)இருக்கிறது என்று இரு பக்கங்களும் வாசிக்கிறார்கள்.

விஜயதாஸ ராஜபக்ஷ நல்லாட்சி அரசாங்கத்தின் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர். சரத் பொன்சேகா நல்லாட்சி அரசாங்கத்தின் வனவிலங்கு மற்றும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சர். சஜித் பிரேமதாஸ நல்லாட்சி அரசாங்கத்தின் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சராக இருந்தார். ரணில் விக்கிரமசிங்க நல்லாட்சி அரசாங்கத்தின் பிரதமர். இந்த ஐவரும் ஒன்றிணைந்து 69 இலட்சம் மக்களை தோற்கடித்த நல்லாட்சி அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர்.

இவர்கள் ஐந்து குழுக்களாக பிரிக்கப்பட்டிருந்தாலும், அவர்கள் ஒரே சித்தாந்தத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள். இவர்களில் ஒருவர் அடுத்த ஜனாதிபதியாக வேண்டும் என்றால், 2019 ஆண்டில் 69 இலட்சம் மக்கள் ஒன்றிணைந்து அரசாங்கத்தை தோற்கடித்தது வீணாகிறது. அவ்வாறெனில், தொடர்ந்தும் அவர்களையே ஆட்சி புரிய வைத்திருக்கலாம்” என்றார். (ஐ)

## பிரமாண்ட...

கட்சியின் சஞ்சீவ எதிரிமன்ன எம். பி.,

“கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரை சம்பிரதாய முறைப்படி அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த சில மாதங்களாக நாடளாவிய ரீதியில் தொகுதி ரீதியாக நடத்தப்பட்ட கூட்டங்களில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையிலேயே வேட்பாளரை நிறுத்த முடிவு எடுக்கப்பட்டது.

போட்டியிடுவது என்று முடிவு செய்து அதை அறிவித்துள்ளோம். வேட்பாளர் யார் என்பதை அதிகார பூர்வமாக மக்களுக்கு வெளிப்படுத்தி பிரசாரத்தை முன்னெடுப்போம். மிகக் குறைந்த நாட்களுக்குள் வேட்பாளரை அறிவிக்கவுள்ளோம். இதற்காக பிரமாண்ட கூட்டத்துக்கு ஏற்பாடு செய்து வருகிறோம் - என்றார். (ஐ)

## சிறார்...

தெரிவித்தார்.

அதிகளவான சிறுவர் பாலியல் துன்புறுத்தல்கள் மேல் மாகாணத்திலிருந்து பதிவாகியுள்ளன. இதன்படி, கொழும்பு மாவட்டத்திலிருந்து ஆயிரத்து 124 சிறுவர்களும் கம்பஹாவில் 907 சிறுவர்களும் களுத்துறையில் 548 சிறுவர்களும் குருணாகலில் 760 சிறுவர்களும் இரத்தினபுரியில் 598 சிறுவர்களும் காலியில் 541 சிறுவர்க ளும் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாகியுள்ளனர்.

மேலும், கடந்த ஆண்டில் 53 சிறுமிகள் கர்ப்பம் தரித்துள்ளனர். 125 சிறுவர்கள் போதைப் பொருட்களுக்கு அடிமையானமை பதிவாகியுள்ளன. சிறார் திருமணம், சிறார் மீதான வன் முறை, சிறார் தொழிலுக்கு அமர்த் தப்படுதல் என்று ஆயிரத்து 714 சிறார் குற்றங்களும் பதிவாகியுள்ளன.

மேலும், சிறாரின் நிர்வாண படங்களை சமூகவலைத்தளங்களில் பதிவிடுவதாகக்கூறி பணம் பெறுதல் - வன்புணரப்படுதல், உடலுறவில் ஈடுபட்டதை காணொலியாக எடுத்து அச்சுறுத்தல், சமூக ஊடகங்கள் மூலம் தொடர்பு கொண்டு அச்சுறுத்தல் அல்லது தமது பல்வேறு தேவைகளை பூர்த்தி செய்ய வைத்தல் போன்ற சம்பவங்களும் அதிகரித்துள்ளன.

எனவே, பெற்றோர் தங்களின் பிள்ளைகளின் தொடர்பில் மிகவும் அவதானமாக செயல்படுவதுடன், கைபேசி பாவனை குறித்தும் கவனம் செலுத்த வேண்டும் என்றும் தெரிவித்தார். (ஐ)

# மகிந்தவுடன் தம்மிக நேற்று சந்தித்து பேச்சு!



கோப்புப் படம்

கொழும்பு, ஜூலை 31

பொதுஜன பெரமுனவின் தலைவர் மகிந்த ராஜபக்ஷவை அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் தம்மிக பெரேரா நேற்று மாலை சந்தித்து பேசியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் பெரமுனவின் வேட்பாளராக தம்மிக பெரேராவே களமிறக்கப்படுவார் என்று கூறப்பட்டு வரும் நிலையில் நேற்றைய சந்திப்பு நடைபெற்றுள்ளது.

இந்த சந்திப்பு மகிந்த ராஜபக்ஷவின் விஜயராம மாவத்தையில் உள்ள இல்லத்தில் நடந்தது. சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் வெளியிடப்படவில்லை. (ஐ)

## கட்சியில்...

தற்போது கட்சியிலிருந்து சென்றுவிட்டோம் என்று கூறுபவர்கள் எங்களுடைய வீட்டுக்கு வந்து சென்றவர்கள். சிலர் நேற்றிரவு (நேற்றுமுன்தினம்) மீண்டும் வந்தார்கள். இன்று (நேற்று) காலையும் சந்தித்தேன். இந்த அளவில் நன்கு பழக்கப்பட்டது. இவ்வாறு நடப்பது இது ஒன்றும் முதல் தடவை அல்ல என்றும் அவர் கூறினார்.

ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுன கட்சி வேட்பாளரை நிறுத்தவுள்ளதாக திங்கட்கிழமை அதிகாரபூர்வமாக அறிவித்தது. இதையடுத்து கட்சி பிளவடைந்தது. இந்த சூழலில் நேற்று அவர் செய்தியாளர்களுக்கு கருத்து வெளியிட்டபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், “கட்சியில் பிளவு ஏற்படும் என்பதை நாங்கள் ஆரம்பத்திலேயே எதிர்ப்பார்த்தோம். தேர்தல் ஒன்றுக்கு முகங்கொடுக்கும்போது பொதுவாக வரலாற்றில் எந்தவொரு கட்சியினதும் பல தரப்பட்ட கருத்துகள் காணப்படுகின்றன. கலந்துரையாடி தமது கருத்துகள் தொடர்பில் வினவுவார்கள். இது ஒரு பொதுவான விடயம். நாங்கள் ஆரம்பத்திலிருந்தே கட்சியை உறுதிப்படுத்திக் கொண்டு செயல்பட்டு வருகின்றோம்.

கட்சியை உறுதிப்படுத்தி எங்கள் கொள்கைகளை வெல்ல நாங்கள் செயல்பட வேண்டும். நாங்கள் ஐக்கிய தேசியக் கட்சியை வெறுக்கும் பக்கத்தில் நிற்கின்றோம். அதனை நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். ஜனாதிபதித் தேர்தலில் பொதுமக்களுடனேயே கொடுக்கல் - வாங்கல் உள்ளதே தவிர, விரும்பிய அரசியலில் அல்ல.

சில நேரங்களில் விருப்பு அரசியலில் ஈடுபட இதுவே, சிறந்த நேரம் என சிலர் நினைக்கலாம். தேசிய வேலைத்திட்டத்துடன் பயணித்த தலைவர்கள் வெற்றி பெற்று சரித்திரம் படைத்தனர் - என்றும் கூறினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# ராஜபக்ஷ தரப்பு களமிறக்கும் வேட்பாளரை பெரும்பாலான எம். பிக்கள் ஏற்கவில்லை!

## அமைச்சரவை பேச்சாளர் பந்துல தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை31

**ஜனாதிபதித் தேர்தலில் மொட்டு சின்னத்தில் வேட்பாளர் ஒருவரை களமிறக்குவதற்கான தீர்மானத்தை பெரும்பாலான பாராளுமன்ற உறுப்பினர்கள் ஏற்கவில்லை என்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையும் பொதுஜன பெரமுனவையும் விட நாட்டையே அதிகம் நேசிக்கிறேன் என்றும் அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.**

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதன் போதே அமைச்சர் பந்துல மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு,

விஜயதாஸ ராஜபக்ஷ அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டதைத் தவிர, தேர்தல் தொடர்பில் அமைச்சரவையில் அவதானம் செலுத்தப்படவில்லை.

எவ்வாறிருப்பினும் அந்தச் சந்தர்ப்பத்தில் பொதுஜன பெரமுனவின் அரசியல் குழுக் கூட்டத்தில் பங்கேற்றிருந்தோம். இதன்போது, மொட்டு சின்னத்தில் வேட்பாளர் ஒருவர் களமிறக்கப்படவேண்டும் என்ற யோசனை முன்வைக்கப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தான் தேர்தலில் போட்டியிடவுள்ளதாகவும், எனவே தனக்கு ஆதரவளிக்குமாறும் கோரி அனுப்பி வைத்திருந்த கடிதம் தொடர்பில் இதன்போது அறிவிக்கப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டு, மேலும் 72 பேருடைய வீடுகள் தீர்க்கிரையாக்கப்பட்டு நாடு முழுவதிலும் வன்முறை தலைதூக்கியிருந்த போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே மீண்டும் அமைதியை நிலைநாட்டினார்.

அது மாத்திரமின்றி பொருளாதார நெருக்கடிகளிலிருந்தும் அவரே நாட்டை மீட்டெடுத்தார். எனவே அவருக்கு நாம் ஆதரவளிக்க வேண்டும் என வலியுறுத்தினோம்.

பொதுஜன பெரமுன சார்பில் வேட்பாளரொருவரை களமிறக்குவதற்கான தீர்மானத்துக்கு எதிராகவும் நாம் வாக்களித்தோம். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீதும், பொதுஜன பெரமுன மீதும் மரியாதை வைத்திருக்கின்றோம்.

ஆனால், அதனை விட நாட்டையே அதிகம் நேசிக்கின்றோம். நாட்டின் எதிர்காலப் பயணம் பாராளுமன்றத்தில் சட்டமாக நிறைவேற்றப்பட்டுள்ளது. அதனை முறையாக முன்னெடுத்து செல்லக் கூடிய ஒரேயொரு தலைவர் ரணில் விக்கிரமசிங்க என்ற அடிப்படையிலேயே நாம் அவருக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ளோம் - என்றார்.

# குளவிகள் கொட்டியதில் 40 மாணவர்கள் பாதிப்பு

கிண்ணியா, ஜூலை 31

திருகோணமலை, கிண்ணியாவில் நேற்று செவ்வாய்க்கிழமை குளவிக் கொட்டுக்கு இலக்கான மாணவர்கள் கிண்ணியா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த மாணவர்களை கிண்ணியா பிரதேச செயலாளர் எம் . எச். முஹம்மது கனி, மருத்துவமனையில் சென்று பார்வையிட்டார்.

குளவிக் கொட்டுக்கு இலக்காகிய 40 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கிண்ணியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு படிப்படியாக சிகிச்சை பெற்று வெளியேறி வருகின்றனர் என்று மருத்துவமனை தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ)

# யுக்திய நடவடிக்கையில் மேலும் 628 பேர் கைது

கொழும்பு, ஜூலை 31

நாடளாவிய ரீதியில் நேற்றுக்காலை 9 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணித்தியாலயத்துக்குள் மேற்கொள்ளப்பட்ட யுக்திய நடவடிக்கையின் போது போதைப்பொருள் குற்றம் தொடர்பில் 628 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் 619 ஆண்களும் 09 பெண்களும் உள்ளடங்குவதாக பொலிஸார் கூறினர்.

இதில் 19 பேர் பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதுடன், 08 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த சந்தேக நபர்களிடமிருந்து 193 கிராம் 949 மில்லி கிராம் ஹெரோயின், 637 கிராம் 789 மில்லி கிராம் ஐஸ், 6,096 கிராம் 76 மில்லி கிராம் கஞ்சா, 287 போதை மாத்திரைகள் மற்றும் 6,508 கஞ்சா செடிகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் கூறினர்.(எ)

# கெஹலிய பிணை கோரிய மனுமீது ஓகஸ்ட் 9இல் தீர்ப்பு

கொழும்பு, ஜூலை 31

தனக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டுள்ள நீதிமன்ற உத்தரவை நீக்கி பிணையில் விடுவிக்குமாறு முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தாக்கல் செய்த மனு மீதான தீர்ப்பு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 9 ஆம் திகதி அறிவிக்கப்படும் என மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்றுச் செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டுள்ளது.

தரமற்ற இம்யுனோகுளோபுலின் தடுப்பூசிகளை இறக்குமதி செய்ததாக குற்றஞ்சுமத்தப்பட்டுள்ள கெஹலிய ரம்புக்வெல உட்பட ஆறு பேரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்த நிலையில், தனக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு தொடர்பான விசாரணைகள் முடிவடையும் வரை தன்னை பிணையில் விடுவிக்குமாறு கோரி கெஹலிய மனுத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு மீதான தீர்ப்பு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி அறிவிக்கப்படும் என மேன்முறையீட்டு நீதிமன்றம் கடந்த 2 ஆம் திகதி உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

# இராணுவ லொறி மோதி வயோதிபர் உயிரிழப்பு!

கேகாலை, ஜூலை 31

மோட்டார் சைக்கிள் - இராணுவ லொறி மோதி ஏற்பட்ட விபத்தில் வயோதிபர் ஒருவர் பலியானார்.

கேகாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கண்டி - கொழும்பு வீதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை இந்த விபத்து இடம்பெற்றது.

கொழும்பிலிருந்து கண்டி நோக்கிப் பயணித்த இராணுவத்தினருக்குச் சொந்தமான லொறியும் மோட்டார் சைக்கிளும் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றதாக பொலிஸார் கூறினர்.

இந்த விபத்தின் போது மோட்டார் சைக்கிளில் பயணித்த கேகாலை - கலிகமுவ பகுதியைச் சேர்ந்த 66 வயதுடைய நபரே பலியானார். (எ)

# உணவு, கல்வி, சுகாதார துறையை வற் வரியிலிருந்து விடுவிப்போம்

## கூறுகிறார் அநுரகுமார எம். பி.

கொழும்பு, ஜூலை 31

கல்வி, சுகாதாரம், உணவு உள்ளிட்ட அத்தியாவசிய துறைகளை வற் வரியில் இருந்து விடுவிப்போம் என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸநாயக்க தெரிவித்தார்.

நாட்டு மக்கள் மீது அதிக வரிச்சுமை சுமத்தப்பட்டுள்ளது. மறைமுக வரி, நேர் வரி இரண்டுமே அதிகரித்துள்ளது. இந்த வரியை நீங்கள் குறைக்கப் போகிறீர்களா? நீக்கப் போகிறீர்களா? நிவாரணம் வழங்கப் போகிறீர்களா? உங்களுடைய வேலைத்திட்டம் என்ன? என தொலைக்காட்சி நேர்காணலொன்றில் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அநுரகுமார மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

"நாம் இப்போது சர்வதேச நாணய நிதியத்தின் நிகழ்ச்சி நிரலுக்குள்ளே இருக்கின்றோம். 2025 ஆம் ஆண்டாகும் போது எமது முதனிலை கணக்கின் மிகை நிலை 2. 3 சதவீதமாக இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளனர்.

இந்த நிகழ்ச்சி நிரலில் ஓடிக்கொண்டிருக்கும் ஆட்சி தான் எங்களுக்குக் கிடைக்கும். ஆகவே, நாங்கள் முதனிலை கணக்கின் மிகை நிலையை 2. 3 சதவீதமாக வைத்துக்கொள்வோம். அதற்காக, எமது வருமானத்தை அதிகரித்து செலவை குறைக்க முடியும். அல்லது செலவை அவ்வாறே வைத்துக்கொண்டு வருமானத்தை அதிகரிக்க முடியும்.

எங்களுடைய பிரதான இலக்கு வருமானத்தை அதிகரித்துக் கொள்வதாகும். இப்போதும் திறைசேரிக்கு வந்து சேரவேண்டிய பணம் திறைசேரிக்கு வராமல் வேறு பாதையில் சிலரின் வீடுகளுக்குச் சென்று கொண்டிருக்கிறது. ஆகவே, அந்தப் பணத்தை நாங்கள் முழுமையாக திறைசேரிக்கு கொண்டு வருவோம்.

திறைசேரியில் இருக்கும் பணத்தை நாங்கள் இந்த நாட்டு மக்களின் தெய்வீக உடைமைகளைப் போல பேணிப் பாதுகாப்போம். ஒரு ரூபாயைக் கூட வீணாக்க இடமளிக்கமாட்டோம்.

நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் மக்களுக்கு சுமையாக மாறியுள்ள வற் வரியை நிச்சயமாகக் குறைப்போம். குறிப்பாக, எமது நாட்டில் கல்வி, சுகாதாரம் மற்றும் உணவுக்கு வற் வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. அதனால், நாங்கள் ஆரம்பக் கட்டத்திலேயே இம்மூன்றையும் வற் வரியில் இருந்து விடுவிப்போம். இதுவரை வற் வரி அறவிடப்பட்ட விசேட பிரிவுகளை விடுவிப்போம்.

நோய்வாய்ப்பட்டால் வைத்தியம் பார்க்க வேண்டும். அதற்கு அரசாங்கம் பணத்தை அறவிட வேண்டுமா? பிள்ளைகள் கல்வி கற்க புத்தகங்கள் வேண்டும். அந்தப் புத்தகங்களுக்கு வரி அறவிட வேண்டுமா? பசியைப் போக்கிக்கொள்ள மரக்கறி வாங்கச் செல்லும் போது அதற்கும் வரி அறவிட வேண்டுமா? இது நெறிமுறைக்கு புறம்பானது" - என்றார். (எ)

# சுற்றுலாப் பயணிகளை தாக்கிய படகு உரிமையாளர்கள் மறியலில்

திருகோணமலை, ஜூலை 31

திருகோணமலை, குச்சவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புறாமலை தீவுக்கு சென்ற உள்ளூர் பயணிகள் மீது தாக்குதல் நடத்திய படகு சேவை உரிமையாளர்கள் மூவரை பொலிஸார் கைது செய்தனர்.

தெஹிவளை பகுதியில் இருந்து புறா தீவுக்கு சென்ற சுற்றுலாப் பயணிகள் மீது தாக்குதல் நடத்திய 60, 45 மற்றும் 40 வயது படகு உரிமையாளர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

இந்தத் தாக்குதலில் சுற்றுலாப் பயணி ஒருவர் காயமடைந்து நிலாவெளி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்ற பின்னர் வீடு திரும்பியுள்ளார்.

இந்த நிலையில், கைது செய்யப்பட்டவர்களை 29 ஆம் திகதி காலை திருகோணமலை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தியதாகவும் அதில் ஒருவர் கடுமையான இருதய நோயாளி என்பதால் அவருக்கு சரீர பிணை வழங்கப்பட்டதுடன் மற்றும் இருவரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார் என்று பொலிஸார் கூறினர். (எ)

# பொலிஸ் மா அதிபராக செயல்பட தென்னக்கோனை அனுமதியுங்கள்!

## வலியுறுத்தி கொழும்பில் பிக்குகள் பேரணி

கொழும்பு, ஜூலை 31

தேசபந்து தென்னக்கோனை மீண்டும் பொலிஸ் மா அதிபராக நியமிக்கக் கோரி கொழும்பு பல்கலைக்கழக பேராசிரியர் அகலகட சிறிசுமண தேரர் உட்பட பௌத்த பிக்குகள் குழு ஒன்று கொழும்பில் பேரணி ஒன்றை நடத்தியது.

கோட்டை புகையிரத நிலையம் அருகே ஆரம்பமான பேரணி கொழும்பு - கோட்டையில் உள்ள போமரத்தை நோக்கி சென்றது.

போ மரத்தின் அருகே மத வழிபாடுகளை நடத்திய பின்னர், பொலிஸ்மா அதிபரின் பதவி காலத்தை நிறைவு செய்வதற்கு உயர் நீதிமன்றம் அனுமதிக்க வேண்டும் என்று பிக்குகள் கோரினர்.

போதைப்பொருள் மற்றும் பாதாள உலக செயல்பாடுகளை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளின் போது தேசபந்து தென்னக்கோன் பல்வேறு தடைகள் எதிர்நோக்கினார் என்றும் போராட்டக்காரர்கள் குற்றஞ்சாட்டினர்.

தேசபந்து தென்னகோன் பொலிஸ் மா அதிபராக செயல்பட இடைக்காலத் தடை விதித்து கடந்த 24 ஆம் திகதி உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தமை தெரிந்ததே.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 31.07.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org